ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௭] பிரமாதி—கார்த்திகை [பரல்-௫

# உக்கிரப் பெருவழுதி

[பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்]

இறையனார் களவியலுரையின் பாயிரப் பகுதியில் முச்சங்க வரலாறு கூறிவருமிடத்தே கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மர் என்றும், அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்றும் நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்னும் இத்தொடக்கத்தன அவர்களாற் பாடப்பட்டன என்றும், அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்றும், அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்றும், அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்றும், அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியர் என்றும், அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரை என்றும் கூறப்பட்டுள்ளது. "நாற்பத்தொன்பதின்மர் என்ப' என்றாற்போல ஒவ்வொன்றும் 'என்ப' என்னும் வாய்பாட்டால் முடிக்கப்பெற்றுள்ளது.

இதன்கண் உக்கிரப் பெருவழுதி கடைச் சங்கத்திறுதியில் இருந்தானாக அறுதியிட் டுரைக்கப்படுதலின், தமிழிலக்கிய ஆராய்ச்சியில் இவன் பெயர் ஒருதலையாகக் குறிக்கற்பால தொன்றும். இவன் கடைச்சங்கத்தின் இறுதியில் இருந்தவன் என்னவே, சங்கச்செய்யுட்களைப் பாடிய புலவருள்ளும் அவராற் பாடப்பட்ட அரசர் குறுநிலமன்னர் முதலாயினாருள்ளும் பெரும்பாலார் இவனுக்கு முற்காலத்திலும் சிலர்

நிகழ்காலத்திலும் விளங்கினர் என்பது போதரும். ஈண்டு இவ்வாறாய இவனது காலத்தின் பின்மையைக் குறித்தற்குப் பிற சான்றுகளும் உளவோ என ஆராய்தல் தக்கது. இவ்வேந்தன் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய அகநானூறு என்னும் நெடுந்தொகையைத் தொகுப்பித்தவன் என்று தெரிதலின் அதிலுள்ள பாட்டுக்கள் அனைத்தும் பாடப் பெற்ற பின்னர் இவன் வாழ்ந்திருந்தனன் என்பது ஒருதலை. எனவே, இவனும் இவனோடு ஒத்த காலத்தினரான சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்டபெருநற் கிள்ளி என்னும் அரசர்களும் ஐயூர் மூலங்கிழார், உலோச்சனார், பாண்டரங்கண்ணனார் முதலிய புலவர்களும் விளங்கிய காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதி என்று கொள்ளுதல் பொருத்தமாகும். யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் முதலிய அரசர்களும், நக்கீரனார், மருதனிள நாகனார், கூடலூர்கிழார், மாங்குடிகிழார் முதலிய புலவர்களும் சிறிது முன்னாக, கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தனராதல் வேண்டும். ஒளவையார் உக்கிரப்பெருவழுதியையும் அவனுடன் ஒருங்கிருந்த மாவெண்கோ, பெருநற்கிள்ளி என்னும் சேர சோழ மன்னர்களையும் பாடியுள்ளாராகலின் அவரும் அவர்கள் காலத்திருந்தாராவர். ஆயின் அவர் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடியிருப்பதுடன் பரணர் தம் காலத்தில் இருந்தமையைக் குறிப்பிடுதலானும், அவர் நீண்ட வாழ்நாள் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றுண்மையானும் அவரது காலம் கி.பி. முதல் நூற்றாண்டின் கடைப்பகுதி தொடங்கி இரண்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதிகாறும் ஆகும் என்னலாம்.

இனி, அகநானூற்றைத் தொகுப்பித்தோன் உக்கிரப் பெருவழுதியாக, அதனைத் தொகுத்தவர் உப்பூரி குடிகிழார் மகன் உருத்திரசன்மர் எனப்படுதலானும், இறையனார் களவியலுரையும் அவரால் கேட்கப்பட்டதென்பது வரலாறு ஆகலானும், திருக்குறள் மாண்பையும் திருவள்ளுவர் பெருமையையும் கிளந்தெடுத் துரைக்கும் திருவள்ளுவமாலைச் செய்யுட்களில் உக்கிரப் பெருவழுதி பாடியதும் ஒன்றாக விருத்தலானும், களவியலுரையின் தோற்றத்தோடும், திருக்குறள் அரங்கேற்றத்தோடும் அவ்வேந்தற்கு இயைபுண்மை புலனாகின்றது. திருவள்ளுவமாலைச் செய்யுட்கள் பற்றிய கொள்கையில் இக்காலத்தே சிலர் மாறுபட்ட கருத்தினராகின்றனர்,

களவியலுரை உருத்திரசன்மராற் கேட்கப்பட்டதுபற்றியும் திருக்குறள் அரங்கேறியது பற்றியும் வழங்கும் கதைகளை அவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. திருவள்ளுவ மாலையின் தொடக்கத்திலுள்ள இரு செய்யுட்களையும், அவை பற்றிய கதைகளையும் கழித்துவிட்டு, மூப்பால் பாண்டியன் அவைக்களத்தே அரங்கேற்றப் பெற்றதென்றும், அப்பொழுது உடனிருந்து கேட்ட புலவர் பலரும் அதனைப் பாராட்டினரென் றும் கொள்வதில் இழுக்கொன்று மில்லை. திருவள்ளுவமாலை யில் வரும் "வைவைத்த கூர்வேல் வழுதி", "தாதவிழ்தார் மாற", "வாளார் நெடுமாற" என்னுந் தொடர்கள் அவை பாண்டியன் முன்னர்ப் பாடப்பட்டன என்பதற்குச் சான்று கும். 'குலபதி நாயனார்' என்றாற் போலும் சில பெயர்கள் எழுதுவோரால் திரிபுற்றிருத்தல் கூடும். கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் சிறிது முற்பட்ட காலத்தே விளங்கினமை புலப்படினும், உக்கிரப் பெருவழுதி ஆட்சி யெய்திய காலம் வரை அவர்கள் வாழ்ந்திருந்து, திருக்குறள் அரங்கேறிய ஞான்று அதனைப் புகழ்ந்துரைத்தனர் என்று கோடல் பொருத்தமேயாகும். மாறுபட்ட கருத்தினர் கூறும் வேறு சில ஏதுக்கள் இக் கொள்கையை மாற்றும் வலியுடையன வல்ல.

இனி, உக்கிரப் பெருவழுதி என்னும் பெயர் 'கானப் பேரெயில் கடந்த' என்னும் அடைமொழியுடன் சேர்த்தும் வழங்கப் படுகின்றது. கானப்பேர் என்பது தேவாரப் பாடல் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினான்கனுள் ஒன்று. இப்பொழுது காளையார் கோயில் என வழங்கப் பெறுவது. கடைச் சங்க நாளில் இஃதோர் பெரிய அரணாகவும், வேங்கை மார்பன் என்பானுக் குரியதாகவும் இருந்தது. இவ் வரசன் அவனை வென்று அதனைக் கைப்பற்றிய சிறப்புப்பற்றியே கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என வழங்கப் பெற்றனன். இவ் வேந்தனது அவ் வெற்றியை ஐயூர் மூலங் கிழார் என்னும் புலவர் ஒரு செய்யுளில் (புறம்-உக) வியந்து பாராட்டியுள்ளார். அதில் அவ் வரணது மிக்க ஆழமாகிய அகழியையும், வானுற நிவந்த மதிலையும், மரங்கள் மிக அடர்ந்த காவற் காட்டினையும் உடையதாய், அணுகுதற்கரிய சிற்றரண்களாற் சூழப்பட்டிருந்தது என்றும், அதனைக் கொல்லன் தீயில் மாட்டிய இரும்புண்ட நீரினும் மீட்டற் கரி தென்று கருதி வேங்கை மார்பன் இரங்குமாறு இவன் வென்று பற்றினன் என்றும் கூறப்பட்டுள்ளது; பாடுவார் அறிவின் எல்லையைக் கடந்த புகழமைந்தவன் என்றும், புலவ

ராற் பாடப்படும் போர்த் துறைகளை முடித்த வெற்றியை யுடையவன் என்றும் இவன் புகழப்பட்டுளான்.

இனி, இவனுக்குமுன் விளங்கிய தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் முதலாயினோர் சேர சோழ மன்னர்களோடு பகைமை பூண்டு போர் புரிந்தாராக, இவ் வரசனோ அவர்களுடன் நண்பு பூண்டிருந்தனன். இவனும் சேரமான் மாவெண்கோவும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் ஒருங்கிருந்த பொழுது ஒளவையார் இவர்களை வாழ்த்திய செய்யுளொன்று புறநானூற்றில் உள்ளது. அதில் இம் மூவர்க்கும் அந்தணரோம்பும் முத்தீ உவமையாகக் கூறப் பெற்றுளது; உலக முழுதாளும் செல்வ மும் ஓரிடத்தே நிற்பதன்றாகலின், வரைந்த நாளெல்லாம் இன்பந் துய்த்தும், அறம் புரிந்தும் வாழ வேண்டும் என்றும், 'வாழச் செய்த நல்வினை யல்லது ஆழுங் காலைத் துணை பிறிதில்லை' என்றும் அறிவுறுத்தலும், வானத்து மீனினும் மழைத் துளியினும் பல காலம் அவர்கள் வாழ வேண்டும் என்று வாழ்த்துதலும் அமைந்துள்ளன.

இங்ஙனம் புலவர் பாடும் புகழுடையனாய இவ் வேந்தன் புலமையினும் சிறந்தானவன் என்பது முற் கூறிய வரலாறுக ளானே போதரும். இவன் பாடிய செய்யுட்கள் அகநானூற்றில் ஒன்றும் நற்றிணையில் ஒன்றும் உள்ளன. அகப் பாட்டில் முள்ளியின் பூவைக் குறிப்பதற்கு,

> கூர்முண் முள்ளிக் குவிகுலைக் கழன்ற
> மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்'

என்று கூறியிருப்பது ஏனைய நல்லிசைப் புலவர்களைப் போன்றே இவ் வரசன் இயற்கைப் பொருள்களை நுனித் தறிந்துளான் என்பதற்குச் சான்றாகும். இப்பாட்டிலே தலைவி ஊடல் நீங்கித் தலைவனைக் கூடிய திறத்தினைத் தோழிக் குரைக்கும் பெற்றி இன்பம் பயப்பதாகும்.

நற்றிணைச் செய்யுளில், 'பன்றியானது புனத்தில் தினையை உண்ணுதற் பொருட்டு எந்திர மமைந்த புழை வழியிலே சென்று புகும்பொழுது பக்கத்தே பல்லி யடித்தலை அறிந்து, ஆங்குச் சென்றால் ஊறு நிகழுமென் றஞ்சி, மெல்ல மெல்லப் பின்னே மீண்டு வந்து முழையிலுள்ள பள்ளியில் தங்கும் நாடனே' என்னும் பொருளமைத்து,

> "எய்ம் முள்ளன்ன பரூஉமயி ரெருத்திற்
> செய்ம்ம் மேவற் சிறுகட் பன்றி

ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதிற் றாழாது
பாங்கல் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்லளைப் பள்ளி வதியும் நாட’

என்று பாடியிருப்பது கற்றோர்க்குக் கழிபேருவகை பயப்ப தாகும். இதில் அமைந்துள்ள உள்ளுறையும் அறிந்து மகிழ் தற்குரிய தொன்றாம். இவ் வரசன் பன்றியானது பல்லி நிமித்தம் பார்த்தலைக் கூறியிருப்பது போன்றே, ஈழத்துப் பூதன் றேவனார் பாடிய அகப் பாட்டிலும்,

‘முதைச் சுவற் கலித்த மூரிச் செந்தினை
ஓங்கு வணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி”

எனக் கூறப்பட்டிருப்பது ஒப்புநோக்கி மகிழ்தற் குரியது.

“நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி’

என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுள் தெய்வப் புலமைத் திருவள்ளுவர்பாலும் திருக்குறள்மேலும் இவ் வரசர் பெருந் தகைக்குள்ள எல்லையில்லா மதிப்பைத் தெள்ளிதிற் புலப் படுத்தா நிற்கும்.

---

## உருப்பெருக்கி

பொருள்களின் உருவத்தைப் பெருக்கிக் காட்ட உதவும் “பூதக் கண்ணாடி” என்ற உருப்பெருக்கி 1637-ஆம் ஆண்டில் இராபர்ட் ஹூக் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

# "ஞானியார் சுவாமிகள்"

[திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், M. A.]

திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூர் ஆதீனத்துச் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளைக் காணும் பேறு எனக்கு முதற்கண் 1921-ஆம் ஆண்டில் வாய்த்தது. அடியேன் அக்காலத்து அறியாப் பருவத்துச் சிறியேன் எனினும், பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமிகள் கும்பகோணத்தில் கும்பேசுவரர் வடக்குவீதியில் திருவாளர் சிவலிங்கம் பிள்ளையவர்களின் இல்லத்தே இருந்தபடி செய்ததொரு நீண்ட சைவசமயப் பிரசங்கத்தின் பகுதிகள் சில இன்னும் என் உள்ளத்தே உள. கேட்போர் மனத்திற் பதியும்படி அழுத்தமாகவும் திருத்தமாகவும் தமிழ்ப் பிரசங்கஞ் செய்வோருள் சுவாமிகளே தலைசிறந்தவர்கள் என்பதற்கு வேறு சான்று வேண்டா. அவர்கள் "மெய்யன்பர்களே!" என்று தொடங்கியக்கால், தாம் அங்ஙனம் அழைப்பதற்குக் காரணம் பலவகையாக அரைமணி நேரம் கூறியதை அவ்வவையின்கட் கேட்ட பலரும் ஆனந்தத்தே அழுந்தி இருந்தார்கள் என்று சொல்லுதல் மிகையன்று.

சுவாமிகளைப்பற்றிப் பிற்பாடு பல சமயங்களில் கேள்விப்பட்டிருந்தேன். ஆயினும், அவர்களோடு நேரில் எனக்குப் பழக்கம் உண்டானது 2-12-34-ல் தான். அவர்களோடு அளவளாவி இருந்தக்கால் உண்டான இன்பம் "இகலிலர் எஃகுடையார் தம்முட்குழீஇ'ப் பெறும் பேரின்பமே. அவர்களை மீட்டும் எப்பொழுது காணப்பெறுவேன் என்ற எண்ணத்துடனேயே அன்று அவர்களை விட்டுப் பிரிந்தேன். அவர்களது மடத்திலே சுவாமிகளது நேரான மேற்பார்வையில் நடக்கும் பள்ளியிலுள்ள சிறுவர்கள் நொதுமலர் முன்னும் அஞ்சாது கூசாது இலக்கிய இலக்கணங்களிலும் சமய சாத்திரங்களிலும் பகர்ந்த விடைகளைக் கண்டு மகிழ்ந்தேன். அவரை அங்ஙனம் பழக்கி இருப்பவர் சுவாமிகளே என்று அறிந்ததும், அன்னார்க்கு என்னோ கைம்மாறு செய்யமுடியும் என்று அஞ்சினேன். அதன்பின், அவ்வச்சத்தினின்று நீங்கி வேறோர் எண்ணத்திற்கு இடங்கொடுக்கலானேன். சைவமடாலயங்கள் எல்லாம் இத்தகையதொரு நல்ல பயிற்சி தமிழ்ச்சைவ மக்களுக்கு அளிக்குமாயின், மடங்களின் தலைசிறந்த நோக்கங்களில் முதன்மையானது நிறைவேற்றப்பட்டதாகாதா என்பதே அவ்வெண்ணம்.

சுவாமிகளது அருமைத் தலைமையின் கீழ் “பெரியார் இருவர்” என்னும் தலைப்புப்பற்றிப் பணூணுருட்டியில் 1934 டிசம்பர் மாத இறுதியில் பேசும் பாக்கியம் எனக்குக் கிட்டிற்று. அன்று நான் பேசியக்கால் ஒருகால் மரபிகந்து பேசியிருத்தலும் கூடும். ஆயினும், ஒழுக்கம் ஓம்பப்பட வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியும் போலிவேடத்தைக் கண்டித்தும் நான் சொல்லிய சொற்கள் மிகமிகப் போற்றத் தக்கன என்று சுவாமிகள் முடிவுரையில் கூறிய பொழுது என் உள்ளத்து எழுந்த உவகை இணைத்தென்று என்னால் வரைய ஒண்ணாதது. “தந்தையர்க்கருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை,” என்பது தானே மெய்? அவ்வூரில் மகாநாட்டு நாட்களில், சுவாமிகள் இயற்றிய தலைமை முன்னுரை பின்னுரைகள், மங்கையர் மகாநாட்டைத் திறந்து வைத்துப் புரிந்த சொற்பொழிவு இவையெல்லாம் அங்குக் குழுமி யிருந்தோரை அவியுணவினோரோடு ஒக்குமாறு செய்தன.

பின்னரும், 1937 டிசம்பரில் வேலூரில் நடந்த சைவ சித்தாந்த மகாசமாஜ மகாநாட்டின்கண் சுவாமிகள் தலைமை தாங்கிப் புகன்ற சொற்கள் பொன்னேபோற் போற்றத் தக்கன. அடியேன் இளைஞர் மகாநாட்டுத் தலைமையேற்றுக் காரியங்களை நடத்தியக்கால் சுவாமிகள என்பக்கத்திருந்து எனக்கு ஊன்றுகோல்போன்று உதவியதை ஒருகாலும் மறவேன். பெரியார் மகாநாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் கொண்டு தலைமைப் பதவியேற்றுத் திறம்படச் செயல்களைச் செய்வதில் தமக்குத்தாமே உவமையாகச் சுவாமிகள் விளங்குவதை யறிந்தேன். அன்று பேசியவர்களுள் திருவாளர்கள் S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் ஆகியோர் சிலர். இவருள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினார். ஒவ்வொருவர்க்கும் சிற்சில பாராட்டுரைகள் சுவாமிகள் திருவாயினின்று மலர்ந்தன. ஆயினும், அவர் தம்முள் எவரோடு மாறுபட்டாரோ அவருடைய கருத்தைக் கண்டிக்குங்காலத்தும், கண்டிக்கப்படுவோர் மனம் புண்படாவாறு தேன் கலந்த சொற்களால் அடிகளார் அறைந்த திறம் வியக்கற்பாற்று. அஃது அவரது இயல்பு எனினும் பொருந்தும். அவ்வியல்பே எக்கூட்டத்திற்கும் தலைமைப் பதவியைச் செவ்வனே தாங்கும் அவர்தம் பெற்றியின் இரகசியம் என்று தோன்றுகிறது.

சமயபீடங்களில் உள்ளவர்களுக்குத் தோற்றப் பொலிவு வேண்டும் என்பாரோடு ஒத்த கருத்துடையவன் எளியேன். அப்பொலிவு சுவாமிகளிடத்து உண்மை அவர் தம் சீரிய ஒழுக்கத்தான் ஆயது எனக் கருதுகின்றேன். அவர்களுடைய குண்டலம் துயல்வரும் காதுகளும், திருநீறு பூசிய நன் மேனியும், கம்பீரமான முகமும் எப்பொழுதும் என் மனக்கண்முன் தோன்றுதலுண்டு. பூசும் நீறுபோற் புனிதர் ஆகிய சுவாமிகள் அன்பர் யாவர்மாட்டும் அருளுடையவர் என்பதற்கு ஒன்றே கூறுவேன். தம்மால் அறியப்பட்ட அன்பர் எவரேனும் எக் கூட்டத்திலாயினும் நின்றுகொண் டிருப்பராயின் அவரை அழைத்துச் சுவாமிகள் உட்காருமாறு சொல்வதுண்டு என்பதை 1938 ஏப்ரல் மாதத்தில் நடந்த தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளி விழாவிற் கண்டேன். கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியைத் தொடங்கி வைக்குங்கால் "அஞ்சுமுகந் தோன்றின் ஆறுமுகந் தோன்றும்" எனவரும் வெண்பாவைச் சுவாமிகள் இயம்பி அழகுபட அர்த்தஞ் சொல்லியமை புலவராலும் மாணவராலும் ஒருங்கு பாராட்டப்பட்டது.

பின் அடிகளார் தில்லைக்குவந்து தில்லைத் தமிழ்க்கழகத்தின் ஆதரவில் இயற்றிய பிரசங்கத்தில்

"முத்தி முதலுக்கே மோகக்கொடி படர்ந்து
அத்தி பழுத்ததென்று உந்தீபற
அப்பழம் உண்ணுதே உந்தீபற"

என்னுந் திருவுந்தியார்ச் செய்யுட்குக் கூறிய விளக்கத்தை வியந்திலாதார் இல்லை. அப்பிரசங்கத்தைக் கேட்ட சமஸ்கிருத பண்டிதர்கள், ஆங்கில அறிஞர்கள், தமிழ்ப்புலவர்கள், தமிழொடு ஆங்கிலம் படித்துள்ள உத்தியோகஸ்தர்கள் பாமர ஜனங்கள், சிறுவர் சிறுமியர் ஆகிய எல்லோரும் இது காலைத் தமிழ்நாட்டில் சுவாமிகளனைய சொற்பொழிவாளர் வேறொருவர் இல்லவே யில்லை என்று சொல்லிச் சென்றார்கள் எனின், வேறொரு சொல்லும் என் புன்வாயினின்று வேண்டுமோ? அடிகள் செய்யும் எந்தப் பிரசங்கந்தான் பாராட்டப்படாமற் போகிறது?

அவர்களுடைய சொற்பொழிவுகளால் தமிழ்மணமும்சைவ மணமும் ஒருங்கே தமிழ்நாட்டு ஊர்தோறும் வீசியுள்ளன. மணத்தைப் பிறர்க்களிக்கும் மலர் கைம்மாறு வேண்டுதலில்லை; சைவ மணத்தையும் தமிழ் மணத்தையும் நமக்கு நாடோறும் அளித்துவரும் இவ்வரு மலரும் நம்பால் எதுவும் வேண்டு

வதில்லை. தன்கடன் மணமளிப்பதுவே எனச்செய்யும் பூப் போன்று, வாடா இப்பூவும் தன்கடன் பணி செய்வதே என அரும்பெருந்தொண்டு இயற்றிவருகின்றது. மலர் வேண்டுவ தெல்லாம் தன்னைக் கசக்கி எறியாமையே; இம்முகமலர் வேண்டுவதொன்றுளதேல், அது தன்னைப் புறந்தூற்றாமையே. அதற்குங் காரணம், புறந்தூற்றுவார் அழியா நரகத்து வீழ்வர்கொல் என்னும் கழிபேரிரக்கமாகும்.

இக்குறிப்பும் என் துணையானன்றி அடிகளாரது பெருமை யால் நாற்றம் பெறுவதாகுக! அடிகளார் பெயரைப் பொன் போற் போற்றுவோமாக! பொன்போற் போற்றுவோமாக!! சைவவுலகும் தமிழுலகும் உய்யும்பொருட்டு அடிகளார் திடகாத்திரராய் நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!!!

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு."

---

## படிக்கும் முறை

1. நல்ல வெளிச்சத்திற் படி; நிழலிலும் இருட்டிலும் படித்தல் கூடாது.
2. காற்றினால் அசையும் சுடருடைய விளக்கொளியிற் படித் தல் கூடாது.
3. படிக்கும் நூலின்மீது வெளிச்சம் விழுதல் வேண்டும். முகத்தின்மீது வெளிச்சமும் நூலின்மீது நிழலும் விழுகின்ற நிலையிற் படிக்கக்கூடாது.
4. குனிந்துகொண்டும் கவிழ்ந்துகொண்டும் படித்தல் கூடாது. நிமிர்ந்து படிப்பதே நேர்மை.
5. முகத்தருகே நூலை வைத்துப் படிக்கக்கூடாது. இயன்ற வரை நூல் தொலைவிலே இருத்தல் வேண்டும்.
6. பொடி எழுத்துள்ள நூல்களைப் படித்தல் நன்றன்று.

# நல்லாசிரியர்கள் தோற்றமும் தாய்நாடும்

[வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி]

எழுத்தியல் வல்லாரினும் பேச்சியல் வல்லாரினும், சிலர் தாம்தாம் பேசுகிற அல்லது எழுதுகிற சொற்களுக்கெல்லாம் தனித்தனியே வரையறையான சில உட்கிடைகள் (concepts) உள்ளனவென்று கருதுகிறார்கள். இதனைத் தம்' நீங்காக் கடனென்றும் கொள்ளுகின்றனர். அவர்களனைவரும் நல்லாசிரியன் (classical author) என்றோ, விழுநூல் (classical work) என்றோ அல்லது இவைபோன்ற வேறு சில சொற்களையோ தம்முடைய நூல்களில் பாரித்து வழங்குவதில்லை, காரணம் அத்தகைய ஆசிரியர்கள் தற்காலத்தில் இல்லை என்ற எண்ணமேயாம்.

இதனை ஆயுமுகத்தான், முதற்கண் தாய்நாட்டு நல்லாசிரியனைத் தோற்றுவிக்கும் கருவிகள் யாவை? என்பதை நோக்குவோம். நோக்குங்கால், ஒரு நாடு இருக்குமாயின், முதலில் அதன்கண் வரலாற்றில் இடம்பெறத்தக்க விழுமிய நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நிகழ்ந்திருத்தல்வேண்டும். பின்னும் அது மகிழ்ச்சியும், கூட்டுறவுங்கொண்ட மக்களை யுடைத்தாகல் வேண்டும். இத்தகைய பண்புமேம்பட்ட திருத்தகு நாட்டில் தோன்றவேண்டும் ஒரு தாய்நாட்டு நல்லாசிரியனென்பான். இவையே முதற்கண் வேண்டப்படுவனவென்க. அடுத்தபடியாக, அந்நாட்டு மக்கள் விரிந்து செழுமிய ஒழுங்கு முறையும், ஊடுருவி நிற்கும் உணர்ச்சியும், உறுதியோடு ஆண்மை நிறைந்த செயல்வன்மையும் உடையராதல்வேண்டும். இவற்றையெல்லாம் அவன் முதலில் கண்டறியவேண்டும். இன்னும் அவன் தாய்நாட்டுணர்ச்சியில் முற்றும் முழுகியவனாகி, உள்ளுணர்வும் நல்லறிவும் கருவியாகத் தற்கால நிகழ்ச்சிகளில் அன்பு செய்வதுபோலப் பழங்கால நிகழ்ச்சிகளினும் பரிவுகாட்டவேண்டும். அவனுடைய நாடு தலைநின்ற நாகரிகம் வாய்ந்திருப்பதை அவன் காணவேண்டும். அது கருவியாகத் தலைநின்ற கலையறிவை அவனே தலைப்படுதல்கூடும். இதற்குத் தடையொன்றுமில்லை. இனி, தனக்கு முற்பட்ட காலத்தே ஏமஞ்செய்யப்பட்ட எல்லாப் பொருட்களையும் அவன் தேடவேண்டும். ஆன்றோரால் தொடங்கப்பட்டு ஏறக்குறைய முற்றுவிக்கப்பட்ட பலவேறு முயற்சிகளையும் கண்டறியவேண்டும். இறுதியாக அவன் அகத்தும் புறத்தும் சூழ்ந்திருக்

கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் மகிழ்ச்சி கொள்ளல்வேண்டும். இங்ஙனமாயின், தவறுகளிடையே பெரிதும் அவன் உழல மாட்டான் என்க.

இனி, ஒருவனிடம் உண்மையான சொற்கள் பிறக்க வேண்டுமாயின், அவன் வாழ்க்கை முறையும் அங்ஙனம் அமைதல்வேண்டும். அதுபோன்றே உண்மையான நூலொன்று வெளி வருவதற்கும் நல்வாழ்க்கை வேண்டப்படும் என்க. என்னை? நூலாசிரியன் இயற்கையின் நிகழ்ச்சிகளுக்கடங்கி, அவற்றிற்கேற்ப ஒழுகும் ஒரு மனிதனேயன்றி, அவற்றின் போக்கை மாற்றும் ஆற்றலுடையவனல்லனாகலின். புலமை சான்ற பெருமக்களிலும் ஒவ்வொருவரும் மக்கள் காரணமாகவும், அரசியல் காரணமாகவும் நிகழும் சிற்சில செய்திகளில் அல்லற்படுகின்றனர். அதுபோன்றே மற்றைச்செய்திகளில் அவற்றாலேயே இன்பம் அடைகிறதைக் காண்கிறோம். எனவே, உண்மையான அமைப்பையுடைய ஒரு நாட்டில்தான் மேதகவுடைய முறையில் நூலெழுதவல்ல தாய்நாட்டாசிரியன் தோன்றக்கூடும்.

இம்முறையே நோக்கின், செருமானியநாடு இயற்கையமைப்பில் ஒன்றுபட்டதாய்க் காணப்படினும், அரசியல் முறையில் பிரிவுபலவுடைத்தாக இருக்கின்றது. ஆதலின், இந்நாட்டின்மீது பழி கூறுவது முறையுடைத்தன்றுமென்க. இங்ஙனம் கூறுவதால், இந்நாட்டில் அரசியல் புரட்சிகள் உண்டாயின், விழுமிய நூல்கள் வெளிவருமென்றும் நாம் கருதவில்லை. ஆதலின் தவறான நோக்கத்துடன் ஆய்ந்து அதன் வழியாகக் கூறுகின்ற நன்மையும் தீமையும்பட்ட அக்கூற்றுக்கள் எவையாயினுமாக; அவை சாலவும் இழுக்குடையவென்க.

அங்ஙனம் ஆய்வோர் நம்முடைய நிலைமைகள் பண்டு எவ்வாறிருந்தன? இன்று எவ்வாறுள்ளன? என்ற இருகூற்றையும் நோக்குதல்வேண்டும். அதனுடன், தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு செருமானிய ஆசிரியரும் எத்தகைய விளைவுகளுக்கிடையில் அடிபட்டனர்? எவ்வாறுயர்ந்தனர்? என்பதையும் அவர்கள் உணர்தல்வேண்டும். அங்ஙனமாயின், அவர் மாசற்ற ஒரு நன்னோக்கத்தை மிக எளிதில் பெறக்கூடும். இச் செருமானிய நாட்டின் கலையறிஞர்கள் கூடி, அவரவர் கலைத்திறத்தில் அவரவர் உறுதியுடன் பணி செய்தற்கேற்ற பொதுமையான கலைக்கழகங்களும் இல்லை. அறிஞர்கள் இந்நாட்டில் சாலச் சிதறுண்டு பரந்த

பல பகுதிகளில் ஆங்காங்கே தோன்றுகிறார்கள்; பலதிறப் பட்ட வழிகளில் கல்வி நலனைப் பெறுகிறார்கள்; இறுதியில் தாமாக அடியோடு மடிகிறார்கள். இல்லையேல் பலவேறு நினைவுக் குறிகளினின்றும், இதற்கென்றே அவற்றை ஆராய் வோர் சிலரால் அறியப்படுகின்றனர். மற்றும், செருமானியக் கலைஞர்கள் தமக்கு வழி காட்டுவாரின்றி, பலதிறத்து ஆய்வு முறைகளினும் வருகின்ற நன்மை தீமைகளை ஏற்று அல்லற்படு கின்றனர்; அவ்வழி வந்த வேலையினும் தமது ஆற்றலை ஒல்லும் வழியெல்லாம் அளந்தறிதற்குத் தாமாகவே தூண்டப் படுகிறார்கள். எனவே இவ்வகையாகச் செல்லுங்கால் தமக்கு எதிர்ப்படும் வினைப்பயன்களைப் பட்டறிந்து அவற்றிற்கேற்ப நாளடைவில் அவர்கள் செய்யக்கூடியவற்றைக் காணும் அறிவு படைக்க முடியும். இங்ஙனம் தாம் பட்டறியும் அறிவு ஒன்றுதான், தாம் செய்யக்கூடியது இன்னது என்பதை அவர்க்கு அறிவுறுத்தும். இவர்கள் இந்நிலையினராக, பொது மக்கள் நன்மையாயினும் தீமையாயினும் அவற்றை ஆராய்ந்து ஒரேயளவாக எல்லாப் பொருளினும் தீயபற்றுடையவரா யிருக்கின்றனர். இது மேற்போந்த கலைஞர்களை ஐயப்பாடான பல நெறிகளில் கொண்டுசெலுத்துகின்றது.

நாட்டின் பல திசையிலும் சிதறிக் கிடக்கும் பெருந் திர ளான மக்கள் இவர்கட்கு உதவி புரிந்தாலும், இவர்களுடன் ஒரே காலத்தில் வாழும் பிறருடைய உழைப்பும், உலையா முயற்சியும் அவர்களை உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய நிலைமைகளுக்கிடையே, செருமானிய ஆசிரியர்கள் உண்மை யான ஒரு மனிதனின் உயர் நிலையை அடைகிறார்கள். பிறகு, அவர்கள் தம்மைப் பாதுகாத்தற் பொருட்டு தங் குடும் பத்தை நன்னிலைக்கண் நிறுத்தற் பொருட்டும் இவ் வுலகிற் பெரிதும் கருத்துச் செலுத்த வேண்டியவராகின்றனர். அக் கவலையினால், பிழைப்புக்கெனச் சில வேலைகளைத் தேடுகின் றனர். அவை பிழைப்புப் பற்றியன வாதலால், அவர்களே அவற்றிற்கு மதிப் பளிப்ப தில்லை. இதனால் அடிக்கடி அழிந்த உள்ளத்தோடே அவற்றைச் செய்வா ராகின்றனர். இதனால், அவர்தம் அறிவு மேம்பட்ட நெஞ்சம் அவர்கள் பிழைப்புக்கெ னச் செய்யும் அவ் வேலைகளோடு தாமே அடங்கிப் போகின் றன. இங்குக் கூறப்பட்ட இவற்றையெல்லாம் கண்டறியாத குறிப்பிடத் தக்க ஆசிரியர்களும் இல்லை. அவ்வாசிரியர்கள் தாங்கள் புதிதாய்ப் பெற்ற நுண்ணறிவை விரைவாகத் தாய் நாட்டின் கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்த எண்ணினர். அவ் வறிவின் சிறப்பியல்களை அவர் நினைத்தாங்குப் பயன்படுத்துங்

காலம் அவர்கட்குத் தீவினை வயத்தான் கிட்டாது போயிற்று. இதுகுறித்து அவர்கள் அடிக்கடி கழிவிரக்க மடைந்திருக்கின்றனர்.

மற்றும், பல வேறு நலத்திற்கும் கேடு தரக்கூடிய புறநாட்டு வழக்கங்களுக்கும் இலக்கியங்களுக்கும் மதிப்புக் கொடுத்து அவைகளையே மிக்வும் போற்றினமையால், உயர் வகுப்பார் முன்னேறுதற்கு அவை பயன்பட்டன வன்றி, விரைவில் செருமானிய மக்கள் செருமானியராக வாழ இடங் கொடுக்கவில்லை.

இனி, திறம் படைத்த பெரியோர் எனப்படும் செருமானியப் புலவர்களையும், நடை வல்லாரையும் குறித்துச் சிறிது ஆராய்வோம். அறிவுச் சுடர் கொளுத்தும் நல்லுழைப்புகளில் இவர்கள் தொடர்ச்சியாக ஈடுபடவில்லை. ஏன்? எடுத்துக் காட்டாகச் சுருங்கக் கூறுமிடத்தில் நமது, "வைலாந்து" எனப்படு மிடத்தில் பதிப்பிக்கப்பட்ட எல்லா நூல்களையும் ஒப்பு நோக்கி, அவற்றி லடங்கிய பொருட்களை விளக்குவதில் திறமையும் உழைப்பும் சாலப் படைத்த, ஒரு வல்லுநரை எடுத்துக் கொள்வோம். ஆயின் அவர் நூல் முறைகளில் கொள்வன கொண்டு சீர்பெற எழுதியிருக்கும் அவர்தம் திறமையை நாம் பெருமையுடன் பாராட்டுகிறேம். அவர், தாமே அரிதின் முயன்று உலையாத உழைப்பினுல், நாளடைவில் திருத்தமான முறைகளைத் தேடினர். இதனுல் உண்மையான நூற் சுவை முழுவதும் வளர்ச்சி பெறுவ தாயிற்று. ஆதலின், இத்தகைய சீரிய நூல்களைத் திரட்டுவதில் ஒவ்வொரு நூல் நிலயத்தாரும் ஒல்லும் வகையெல்லாம் வருந்திமுயல்வார்களாஞல், அவற்றை நன்மை தரும் வகையில் எவ்வாறு பயன் படுத்துவதென்பதை அடுத்து வரும் நூற்றுண்டைய மக்கள் நன்கறிவார்கள். இது நமது நம்பிக்கை.

இனி வருங் காலத்தில் நம்முடைய விழுத்தகவுடைய எழுத்தாளரின் வரலாற்றை நாம் ஆண்மையுடன் உலகுக் களிக்கக் கூடும். அவ் வரலாறு அவர்களின் நூல்களில் சீரியவாகப் பயின்ற செய்திகட் கேற்ப அவர்தம் முன்னேற்ற வளர்ச்சியை விளக்கிக் காட்டுவதாக விருக்கும். இல்லையேல் அவர்கள் தாமாக இவை வேண்டுவன என்றுணர்ந்து நமக்கு அறிவித்தாலன்றி, அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் நின்ற செய்திகளையோ அல்லது அதற்குத் தடை பயந்து குறுக்கிட்ட இடையூறுகளையோ, அவர் செய்த நலங்களால் விளைந்த நன்மைகளையோ விளக்கமாக நாம் எதிர்பார்க்க முடியாது.

எதிர்பார்ப்பின் அஃது இன்னும் சேய்மையிற் சென்று பயன் தருவதாமென்க.

பொறுமையுள்ள இளைஞர்கள் தற்காலத்தில் தம் சிறு பருவத்திலேயே உயர்நிலை யடைகிறார்கள். தாம் எடுத்த பொருளைக் குறித்து அதற்கேற்ற தூய நடையில் எழுதுகிறார்கள். இவற்றிற்கேற்ற நல்வினையும் படைத்திருக்கின்றனர். அருந் திறல்வாய்ந்த ஆசிரியரென்று கூறப்படுவாரெல்லாரும் இவ் விளைஞர்களைக் குறித்துச் சிறிதளவே உணர்வாராகின்றனர். இவர்கட்கு முன்புள்ள இவ் அரைநூற்றாண்டில் வாழ்கின்ற மக்கட்கே இவர்கள் கடப்பாடுடையவராகின்றனர். அம்மக்களனை வரும் தத்தம் இடையறாவுழைப்பினால், வழிப்பட்ட எல்லாத் தடைகளையும் கடந்து தாமே தம் வழியிற் சென்று முன் னேறியவர்களாவார்.

இனி, அறிவுவிளக்கம் பெறாத காலத்திலிருந்த ஆசிரியர் களெல்லாரும் மிகத்தெளிவில்லாத இடத்தில் அவ்வறி வொளி யைச் சிறிது சிறிதாகப் பெருக்கிக்கொள்ளுதற்கு அலைந்து திரிந்தனர். திரிந்தும், அஃது எதிர்பாராது விளைந்தாலன்றிப் பயன் தருவதாயில்லை. ஆனால் அதற்குமாறாக இக்காலத்தில் மேற்கூறிய நிலைகளுக்கிடையில், கண்டறிய முடியாத ஒருகுழு காணப்பட்டிருக்கின்றது. அதனுட் செல்லும் ஓர் இளைஞன் மிகப்பெரியதும் தெளிவுடையதுமான நல்லிடத்தினை யடை கின்றான்.

நிற்க, மெய்ந்நெறி தெரியாத ஒருவர் தம்முடைய சிறிய அறிவொளி கொண்டு, ஆய்வோர் செல்லும் இருள் நெறியை விளக்குகின்றார். அது மிகவும் பையப்பைய முன்னேறுவதா கும் எனவே, அவரை எதிர்பார்க்க வேண்டாம், என்று இருள் புலர்ந்து நற்பகல் தோன்றிவிட்டது. மீண்டும் நம் அறைக் கதவுகளை மூடிவைக்கவேண்டுவ தில்லையென்க.

மக்கள், நல்லோர் குழுவில் தங்கள் தீத்தகவுடைய நளி னப் பேச்சுகளைப் பயன்படுத்துவதில்லை, அது முறைமையன் றுதலான். ஆனால் இன்றைய நிலையில் சிறந்த எழுத்தாளர் களைக் கொண்டுள்ள செருமானிய நாட்டில் அக்கூற்றுக்கு மாறாக, அவ்வகை எழுத்தாளர்கள் இல்லை என ஒருவர் மறுத் துரைப்பாராயின் அவன் மிகவும் நகையாடத் தக்கவராதல் வேண்டும். இதனை யுணர்ந்து கொள்ளற்கு ஒருவன் புனைவு நூல்களைத் தேடவேண்டுவதில்லை ; சிற்சில பொருள்குறித்துச் செவ்விதாக எழுதப்பட்ட கட்டுரைகளை நாடவேண்டுவதில்லை.

ஆராய்ச்சித் தாள்களும், ஏனை வெளியீடுகளும் மிக ஒழுங்கான உயரிய நடையில் எழுதப் படுகின்றன. அவற்றைப்பார்த்திடட்டும்; அவையே போதிய சான்றுகளாம். நாடோறும் செருமானியர்கள் பலவேறு உண்மைகளை மேன்மேலும் கண்டு உயர்நிலை படைகின்றனர். அதனுடன் நிற்பதில்லை, அவை மிக உறுதியாகவும் நன்கு தெளிவுபடுத்தப் படுகின்றன. இவைகட்கு எதிராகப் பல திறத்தினும் எழுதப்படும் மறுப்புரைகளால், தமது நுண்ணறிவின் திறனை மேன் மேலும் வளர்த்துக் கொள்ளுகின்றனர். எனவே, அவற்றால் வரும் பயன்களையும் அவர்கள் இழக்கவில்லை. இன்னும், பலவேறு அறிஞர்கள் உழைத்தும் வருந்தியும் இழைத்த நடைத் திறங்களைப் பற்றிய பல வேறு குறிப்புக்கள் இருக்கின்றன. ஒரு நல் இளைஞன் அந்நடைத்திறங்களை அடைதற்கென்று தானாக முயலாமல், தெளிந்த நடையினையும், தக்க ஒழுக்க முறைகளையும் எளிதிலடையுமாறு இவைகளே செய்துவிடுகின்றன. இன்றைய நிலையில் நன்மையும் தூய்மையும் ஒருங்கு உணர்ந்த ஒரு நன்னெஞ்சத்தினர் செருமானிய நாட்டின் எழுத்தாளர்களைச் சீரியநிலையில் வைத்துக் காண்கின்றார். அவர்கள் மீது இழிவாகச் சிலர் கூறும் பழிப்புரையால் பொதுமக்களும் கலங்கிவிடமாட்டார்கள் என்றே நம்புகின்றோம். இங்ஙனம் கேடு சூழும் ஒருவர் மக்கட்குழுவினின்று ஒதுக்கப்படுதல்வேண்டும். முன்னேறிச் செல்லும் எழுத்தாளர்களனைவரும் அவர் ஒருவரால் உளத்திட்பமிழக்கிறார்கள்; இசைகத்தக்க பொதுமக்களனைவரும் மதிப்பிழக்கின்றனர்; நடு நிற்போர் யாவரும் நம்பிக்கையின்மையும், புறக்கணிப்பும் கொள்வாராயினர். எனவே இத்தீமைகளினின்றும் ஒவ்வொருவரும் விடுதலையடைய வேண்டும்.

---

குறிப்பு:—இஃது ஆங்கிலப் பேராசிரியர் "கீதே" என்பார் எழுதிய ஒருகட்டுரையின் மொழி பெயர்ப்பு.

# கலித்தொகையிலொரு கதை

[மகிழ்நன்]

(௩௱௫௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பிலானைக் கண்டுங் காணாதவள்போல் நடந்து தினைப் புனத்திற் கிளியோட்டச் சென்ற நங்கையின் பெயர் கயற் கண்ணி. இவள் வரப்பின்மேல் நடந்து புனத்தில் நுழைந்து மறைந்தாள். மறைந்தாளாயினும், ஒப்பிலானிருந்த விடத்தை யவள் ஒளித்துக்கொண்டு பார்த்தாள். நிலத்தைத் தன் காற் பெரு விரலாற் கீறியும், கரிய பெரு விழிகள் அகன்று தோன்ற நீள நினைந்துங் கயற்கண்ணி நிற்க, அவள் சென்ற வழியே இமையாது நோக்கி, மீண்டுமவள் தன்முன் தோன்றி மகிழ்ச்சி யளிப்பாளென்று எதிர்பார்த்து ஒப்பிலான் காத்திருந்தான். இவ்வாறு ஓர் அரை நாழிகை கழிந்திருக்கும். இந்த அரை நாழிகை இருவருக்கும் மிக நீண்டகாலமாய்த் தோன்றிற்றென் பது விளம்பாமலே விளங்கும். தன்னை அவன் தொடர்ந்து வந்து முகமலர்ந்தொரு சொல்லுரையாது வாளாவிருந்தமை கயற்கண்ணிக்கு வருத்தத்தையும் நாணத்தையு முண்டாக் கிற்று. அவனும் அங்ஙனமே வருந்தினனென்பதை அவள் எப்படி அறிவாள்? அன்புத்துறையில் ஆடவர் முன்சென்று காதலை வெளியிடுவது இயற்கை. ஆண்மையில் உயர்ந்தவன் எனத்தோன்றிய இம்மகன், இதைச் செய்ய வல்லவனல்லன் என்பதவளுக்கு எப்படித் தெரியும்?

“இங்கே நெடுநேரமிருப்பது பொருந்தாச் செயலாகும். அகன்று செல்வதற்கோ உளமிசையவில்லை. யாராயினு மிங்கு வந்து எனது நிலைகாண்பாராயின் என்ன நினைப்பர்? எனக்கு வரும் வெட்கம் ஒருபுற மிருக்க, இவ்வினியவளைப்பற்றிப் பலவாறு பேசுவர். என்பொருட்டுப் பழிச்சொல் இந்நங்கை மீது பிறப்பின், என் செய்வது? கடிதில் அகன்றுவிடுவதே நமது கடமை,” என்ற நினைவினனாய் எழுந்தான் ஒப்பிலான். புனத்தில் மறைந்து நின்ற கயற்கண்ணி இது கண்டு, “என்னைத் தேடி வருகின்றான் இனியன். அவன் வருவதை யறியாதவள்போல் ஈண்டு நிற்பேன்,” என நினைந்து விரிந்து தொங்கிய கூந்தலைச் சேர்த்து முடித்து, ஆடையின் வெவ்வேறு பகுதிகளைச் செவ்வை செய்துகொண்டு, அணிகளைத் திருத்தி யமைத்து, நாணம் விரவிய புன்முறுவலுடன் நின்றாள். சிறிது நேரமாகியும் அவன் வரவில்லை. நின்றவிடத்திலேயே நிற்கக் கூடாதவளாய்க் கயற்கண்ணி விரைந்து நடந்து, அருகிலிருந்த ஒரு மரத்திலிருந்து தொங்கிய ஊசலிற் போய் அமர்ந்தாள்.

நினைவைச் செயலாக்குவது எவர்க்குமெளிதன்று. போய் விடவேண்டுமென்ற கருத்துடன் எழுந்த ஒப்பிலான், "இன்னுமொருமுறை இவள் திருமுகத்தைக் கண்டு செல்வேன். அதனாற் குற்றமொன்றும் நேர்ந்துவிடாது." என்ற உறுதியுடன் புனத்திற் புகுந்தான். புகுந்து நாலடி வைத்தபின், "ஒருவேளை இந்த நங்கை எனது நினைவை யறிந்து, 'யாது நினைந்தனை, மடமகனே? ஈண்டு வரக் காரணமென்?' என்று கடுஞ்சொற் கூறிடின், என் செய்வேன்?" என அஞ்சிப் பின் வாங்கினான். இங்ஙனம் இருமுறை முன்சென்று, பின் திரும்பி அயர்த்து, வியர்த்து, அவன் பட்டபாட்டை எவரெடுத்தியம்புதல் கூடும்!

ஊசலாடினாள் கயற்கண்ணி. அவள் உளமோ, ஒப்பிலான் வரவை எதிர்நோக்கி வெடித்துப்போம்போ லிருந்தது. இவ்வுணர்ச்சியை ஒருவாறு நீக்கிக்கொள்ள மிகமிக விரைவாய் ஊசலை அவள் ஊக்கினாள். சேர்த்து முடித்த கூந்தல் மறுபடியும் விரிந்து விழுந்தது. கைகளிரண்டும் ஊஞ்சலின் கயிறுகளைப் பற்றியிருக்க, கால்களிரண்டுமொன்றி முன்னே நீள, விரிந்த கூந்தல் பிறகே பறக்க, எவ்வளவு அழகாய் அவள் விளங்கினாள்! "இவள் நிலமகளல்லள், வான் மகளே," என்று கண்டோர் கருதுமாறு தோன்றினாள். துறந்தோரும் அவள் அழகுகண்டு வியந்திருப்பர். "இவளைப்பெறும் மகனே மகன்," என்று முதியோரு முரைத்திருப்பர். பெறும் மகன் வரவில்லை. அவன் நிலை வருந்தத்தக்கதாயின், இவள் நிலை இரங்கத்தக்க தன்றோ?

"அந்த நன் மகனைக் காணேன். இறுமாப்புடையே னென்று கருதிச் சென்றனனோ? திரும்பிச்சென்று பார்க்கப் பெரிதும் என் உளம் நாடுகின்றது; நாணமோ தடுக்கின்றது. அதோ, கிளிகள் பறந்து வந்து வழிப் பக்கமாய்ப் புனத்தில் இறங்குகின்றன. அவற்றை ஓட்டுவேன்போற் சென்று, எளியனாய் நின்று என்னை நோக்கிய உரவோனைக் காண்பேன். யாருந் துணையின்றிச் செல்கின்றேன். அங்கே யாதுநேருமோ? யாரறிவார்?" என்று தனக்குள் மொழிந்து, கதுமெனக் குறித்து, எழிலொடு நடந்து, ஒப்பிலானிருந்த விடத்தை யணுகினாள்.

அவளங்கு வருமுன்னரே, எண்ணுதனவெல்லாம் எண்ணி யுருகிய ஒப்பிலான், மற்றுமொருகால் கயற்கண்ணியின் முகத்தைக் காண வேண்டுமென்றெழுந்த பெரிய ஆவலை முயன்று முயன்றடக்கிப் பற்களை இறுகக் கடித்தவனாய்ப் பகற்கனவு

காண்பவன்போல் தன் வழியே சென்றான். உளத்திலெழுந்த கழிபேருணர்ச்சியை மீண்டுமீண்டும் ஒடுக்கிய முயற்சியின் காரணமாய் அவனுடலிற் கடுவெப்ப மெழுந்தது. களைத்துத் தளர்ந்து போனான் காளை. எதிரிகள் கண்டு நடுங்குமாற்றல் வாய்ந்த தோன்றல், இன்று தனக்குள் நிகழ்ந்த போரால் மெலிந்து போனான். "உடல் சுடுகின்றது; நடப்பது தானும் எளிதாயில்லை. பாலையில் நடந்துவந்த காலையு மித்துணை யான் வருந்தவில்லை. இன்று காலை யானோர் உயர்மகனா யிருந்தேன். இப்பொழுதோ எனது நிலை இரங்குதற்குரியதாயுளது. தினைப் புனத்தைவிட்டு உடல் பெயர்ந்து போகின்றது. உளமோ இன்னும் அங்கேயே உளது. மங்கையின் நினைவே என்னை யாள்கின்றது. இத்தகைய ஆற்றல் பெண்டிர்க்குண்டென்று நேற்று யாராயினு மெனக்குச் சொல்லி யிருந்தால் நம்பி யிருப்பேன்கொல்? 'அறிவகன்ற மக்கள் கூற்று', என்று எள்ளி நகையாடி யிருப்பேன்." என்றிவ் வகையில் ஒப்பிலா னின் நெகிழ்ந்த நெஞ்சு ஓடிற்று.

தனக்குக் கிட்டிய விரிதோட் பெரு மகனைப் பிரிந்த கயற்கண்ணி, அவன் சென்ற வழியில் வந்து நின்று, வலக் கையை இடக் கை பிடித்து இரண்டுங் கீழ் முதுகிற்கிடக்க, தோளிலே தொங்கும் வில்லையுடையவனாய், முன்னே சிறிது தலையைச் சாய்த்துக்கொண்டு மெல்ல நடந்த நல்ல மகனை நோக்கி நெஞ்சு புண்ணாகி வாடினாள். காந்தள் மெல் விரற் கைகளைப் பிசைந்து நெட்டுயிர்ப்பு விட்டாள். தன் குறுமதியை எண்ணி நொந்தாள். வெந்நீர்போன்ற கண்ணீர் வடித்தாள், துடித்தாள். "சிறிதுமுன் வந்தேனில்லையே! என்ன தீவினை செய்தேனோ? யான் வருமுன் பெருமகன் அகன்றான். குறிப் பாய் அவன் தன் காதலைபுணர்த்தியு மொன்றும் அறியாதவள் போல் நடித்தேன். இனியவனைக் காணேனாயின் எங்கு சென்று தேடுவேன்? யாரிடத்திற் கேட்பேன்? இறந்தொழி வேன்," என்றழுதாள் அங்கயற்கண்ணி.

கதிரவன் சாய்கின்ற நேரம் அண்மையிலிருந்தது. பின் திரும்பலாகாதென்ற உறுதியுடன் ஒப்பிலான் நடந்தான். வழியருகே குளமொன்றிருந்தது. அதன் கீழ்த் திசைக் கரையில் நீண்டுயர்ந்த ஓர் அரசமரம் நின்றது. ஆழ்கின்ற ஞாயிற்றின் ஒளிபட்டு மிளிர்ந்து, கலகலவென்று காற்றிலாடிய அரசிலைகளையும், அவற்றிடையே கொஞ்சிக் குலவிய கிளிகளை யும் நோக்கிய செம்மலின் உள்ளத்தில், கயற்கண்ணியைக் கண்ட காட்சி மறுபடியுஞ் சொல்லரிய தெளிவுடனும் அழகுட னும் பதிந்தது. புனத்தை நாடி உடனே செல்லவேண்டு

மென்ற பேரவா மீண்டும் உரங்கொண்டெழுந்தது. அவன் குளக்கரையிற் போய் நின்றான். "அரச மரத்துக் கிளிகாள்! இனியவளொருத்தி தினைப்புனத்தில் உங்களினத்தை யோட்டிக் கொடுமை செய்கின்றாள். பறந்து செல்வீராயின், கடிதில் அப் பாவையைக் காணலாம். கண்டு, இங்கே ஒரு மகன் அவள் நினைவாற் கரைந்துருகி, அவளைப் பார்க்கவெழுகின்ற அவலே மேற்கொள்ளமாட்டாது தவிக்கின்றானென்று சொல்வீரோ? இதற்கு முன் அவளை யான் பார்த்ததில்லை; அவளும் என்னைப் பார்த்திராள். ஓர் இமைப்பொழுதிலெழுந்ததே பிணிப்பு! பிறிதொன்று நினைக்கவும் செய்யவும் விடாத பிணிப்பு! இது பிணிப்போ, பிணியோ என்னென்பேன்! இதை யாரிடத்திற் கூறுவேன்? எங்ஙனமெடுத்துரைப்பேன்?" என்று சிறிது நேரம் கலங்கிப் பின், "உன்னைக் கொடியவளென்று யான் நினைப்பது என்ன அறிவின்மை! எனது நிலையை நீ அறிவாயாயின், என்மீது நீ இரங்காதிராய். நெடுவிழிச் செல்வி, பொற்பாவாய்! நீ இனியை. உன்னைக் கடிதிற் காணுமலிரேன். எங்குச் சென்றன என் அறிவாற்றல்கள்? இன்றிரவே இதை நன்காராய்ந்து ஒரு முடிவு காண்பேன். வருவது வருக," என்று தேறி, ஏறுபோல் நடந்து வீடுபோய்ச் சேர்ந்தான்.

---

## கம்பளி

ஆட்டு மயிராற் கம்பளி நெய்வது யாவரு மறிந்தது. பாலிலும் வெண்ணெயிலுமிருந்து கேஸீன் என்ற புதுப்பொருளொன்றை யெடுத்து அதிலிருந்து கம்பளி யுண்டு பண்ணுதல் இத்தாலியர் கண்ட புதுமுறை. நிலக்கரியுடன் சுண்ணம்பையும் ஒருவகைப் புளிப்புப் புகையையுஞ் சேர்த்துக் கம்பளி செய்யும் புதுமுறை ஜப்பானியர் கண்டுபிடித்துள்ளதாகும். வெள்ளரிக் காயிலிருந்து வெயில் உண்டாக்குவதா என்ற ஏளனப் பழமொழியும் ஒருகால் உண்மையாகலாம்போலும்.

# ஆறு

ஆறே! மாந்தர் ஆவியாம் பயனே
சீருடை நின்றது செவ்வியைச் சாற்றற்
கொல்லுவ தல்ல வெனினு மோருரை
சொல்லக் கேண்மதி சூழ்நல னினக்கே
மஞ்சு கண்படுக்கு மலைமுக டிழிந்து
பைஞ்செடி கொடிகள் பயிலுநற் சாரல்
இழுமெனு மொலியோ டிறங்குறுந் தோற்றம்
பீடுகெழு திருவின் பெருந்தகை நெடுமால்
ஆடெழின் மார்பத் தலங்குவெண் டுகிலும்
கடுக்கு மன்றியுந் துடிப்பெருங் கரத்துப்
பிறைநகுஞ் சென்னி யிறையெழிற் கருணை
உருவெடுத் திழிந்து வருவதூஉங் காட்டும்
அடுக்கன் மீமிசை யளப்பரு மணியும்
பொன்னொடு முத்தும் பூங்கே ழாரமும்
இன்னன வகிலு மிருநிதி பிறவு
மலைநெடுங் கரத்தால் அகழ்ந்தெடுத் தேகுபு
மலைச்சார் வதியு மக்களுக் களிப்பாய்,
பிறந்தகப் பொருள்கள் பெட்புடன் பெறீஇச்
சிறந்ததன் மகாஅர்ச் சீர்பெற வோம்பும்
நற்றாய் பொருவுவை மாதோ நற்சீர்
நானிலப் பகுதியின் நலம்பல பயின்று
வேங்கை சூடி வெண்முகை முல்லைப்
பூங்கேழ்த் தாது புனைந்து தேங்கமழ்
வாங்கிதழ்த் தாமரை மலைந்து நீங்கவின்
நெய்தலஞ் செறுவின் நிறைநலங் காண்பான்
ஒய்யென வொலித்தாங் கோடுவை, வைகல்
தொகுவளை முன்கைத் தோகையர் சூழீஇ
யகமகிழ்ந் தாட மிகமகிழ் சிறப்பினை,
மன்னு வுலகத்து மன்னுத லிலராய்க்
கொன்னே வீண்பொழு தாற்றுநர் கொள்கை
என்னே பெரிது நகையுடைத் தெனல்போல்
திரைக்கை நீட்டி, நுரைப்பல் காட்டி
ஒலியெனுங் குறிப்பால் உரைப்பதற் கஞ்சாய்,
புலனுண் டோர்ச்சிப் புலவோர் நூல்போல்
ஆழமுஞ் செறிவு மகலமு முடைத்தாய்ச்
சூழிருந் துறைபல துதைந்த நேர்மையாய்
ஒருபெருந் தலைவனை யுட்கொளச் சிறந்தனை

கன்னலு நெல்லுங் கழனிகள் செழிக்க
மன்னிய சிறப்பின் மல்குநீர் பரப்பினை
தெண்ணீர் வறண்டு திரிதருங் காலத்
துண்ணீ ரதனு லோம்பினை யுலகம்,
வறுமையிற் செம்மை வயங்குநல் வாழ்க்கைச்
செறிவுடைச் சான்றேர் செய்கை யேய்த்தனை
உலகமென்னு மோர் பெருங் களத்தில்
அலகி னுடைக மாடிநாட் செலுத்துபு
புனைந்திவட் புகுத்திய புகலருஞ் சிவத்தை
நினைந்தவ ணடையு நிகரிலார் பொருவ
ஏறியு மிறங்கியு மெறிந்துந் திரிந்தும்
வேறுபல் தொழிலும் விளங்குற வியற்றித்
தன்னை யாக்கிய தனிப்பருங் கடலே
மன்னுதன் னிடமே வருத்ததிற் கலந்தனை,
நின்னது பெற்றி நினையலாந் தகைத்தோ
எழுமை யெழுபிறப் புள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பெனு முறைபோல்
உன்னருள் தன்னல் உயிர்பிழைத் தெழுந்த
மன்னிய சிறப்பின் மலர்மரத் தீட்டம்
இருபாற் கரையினு மிணைந்தெழுந் தோங்கும்
சினைக்கரந் தாழ்த்திச் செம்மலர் தூஉய்
நினைப்பரு வணக்க நிகழ்த்தலு மழகே
இன்னதோர் நின்றன் எழிற்சிறப் பதனல்
உலக வாழ்க்கையில் உறுபெரு மயர்ச்சி
விலக வேண்டுவார் வேண்டுத னின்றன்
அழகொன்றே யிதில் ஐயமொன் றிலையால்
எழினில மாந்தர்க் கிம்மையி னியல்பில்
ஏற்பன காட்டி நோற்பன வியற்றி
யோம்புதல் விழைந்தனை யுனற்றினை மனம்போல்
ஆங்குநீ பெற்ற வரும்பய னென்கொல்
மேம்படு சிறப்பில் விளங்குதி நீயே.

—சி. து. கன்னிசாமி.

# கால்டுவெல் ஒப்பிலக்கணம்

[காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

## திராவிட மொழிகள்

### தமிழ்—III

பாண்டியர் :—[1] "மகாவமிச"த்திற் றொகுத்து வைக்கப் பட்டுள்ள சிங்கள வரலாற்றுக் குறிப்புக்களில், ஈழ நாட்டின் முதன் மன்னன் விஜயன் என்பவனே என்றும், அவன் பாண்டிய நாட்டு மன்னன் ஒருவனின் மகளை மணம் புரிந்தானென்றும், அவன் மகனுக்கு அதனாலேயே பாண்டு வமிச தேவன் என்று பெயரிடப்பட்டதென்றும் காணப்படுகின்றது. மகா பாரதத்திற் பாண்டவர்கள் ஐவரில் ஒருவனாகிய அருச்சுனன் பாண்டிய மன்னன் ஒருவனின் மகளை மணந்தானென்றுங் காணப்படுகிறது. [2]பிளினி என்னும் உரோம வரலாற்றாசிரியர் காலத்தில் மலையாளநாட்டில் ஒரு பகுதி பாண்டியர்களின் ஆட்சிக்குள் இருந்ததாக உறுதியாகத் தெரிகிறது. ஆகவே, இவற்றாற் பாண்டிய நாட்டின் ஆதிக்கம் நெடுந்தொலை பரவியிருந்த தென்பது எளிதில் ஊகிக்கப்படும்.

இனி, அகஸ்டஸ் என்ற உரோம் நாட்டு மன்னனுக்கு இந்தியாவிலிருந்து தூதனுப்பியவன் வடநாட்டுப் போரஸ் அல்லனென்பதும், அவன் தென்னாட்டுப் பாண்டியனே என்பதும் உறுதியே. சென்னைப் பொருட்காட்சிச் சாலையில், கிளாடியஸ் என்னும் உரோம் நாட்டு மன்னன் பிரிட்டன் நாட்டை வென்றதற்கு அறிகுறியாக வெளியிட்ட காசு ஒன்று மதுரைக் [3]கூற்றத்திற் கிடைத்ததாக எடுத்துச் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. ஏரியன் முடி மன்னர்களில் ஒருவரான [4]வேலன்ஸ் என்பானின் காசு ஒன்று வைகையாற்றிற் கிடைத்த தாக [5]சர். எம். இ. கிராண்ட் டஃப் என்பார் எழுதியுள்ளார். இவற்றால் பாண்டிய நாட்டிற்கும் ஐரோப்பாவிற்கும் பண்டைக் காலத்திற் றொடர்பு இருந்துவந்ததெனத் எளிதிற் புலப்படும்.

வடமொழிப் பாண்ட்ய என்ற சொல் தமிழிற் பாண்டியன் என்று எழுதப்படுகிறது. இதுவே குறுகிப் பாண்டி என்றும் எழுதப்படுகிறது. தமிழிலும் மலையாளத்திலும் வழங்கும் பண்டு என்ற சொல்லிலிருந்து பாண்டியம் என்ற சொற் பிறந்திருக்கக்கூடும் என்று கொள்வதற்கில்லை. பாண்டவர் தந் தந்தையின் பெயரான பாண்டு என்னும் வடமொழிச் சொல்

1. Mahawanso 2. Pliny 3. District. 4. Valens.
5. Sir. M. E. Grant Duff

லடியாகவே இது பெறப்பட்டிருத்தல்வேண்டும். ஆனால் தமிழா ராய்ச்சி யறிஞர்களெல்லாம் இது பண்டு என்னும் தமிழ் வேர்ச் சொல்லிலிருந்து பெறப்பட்ட தொன்றாகவே வற்புறுத்திக் கூறு கின்றனர். பாணினிக்குப் பின்வந்த [1]**காத்தியாயனர்** என்பார் பாண்டுவின் வழியினரே பாண்டியர் என்று கொண்டிருப்ப தாகப் [2]**பேராசிரியர் மாக்ஸ்முல்லர்** குறிப்பிடுகிறார். பாண்டி யர்களின் முதல் தலைநகரம் பொருநைக் கரையிலிருந்த **கொற்கை** என்பதாகும்; இரண்டாந் தலைநகரம் **மதுரை**. பண்டைய தேசப் படங்களில், [3]**மட்ரா** என்று காணப்படுவதும், ஆங்கிலத் தில் [4]**மதுரா** என்று சொல்லப்படுவதும், கிரேக்கர்களால் [5]**மெதோரா** என்று குறிக்கப்படுவதும் இத் தமிழ் மதுரையே யாம். பாரதப் பெரும்போர் முடிந்த பின்னர் பாண்டியர் களின் ஆட்சியிலிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதும் இம் மதுரையேயாம். ஆனால், வடமொழி நூலாகிய [6]**ஹரி வமிசத்** தில் இது **தென் மதுரை** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஈழ நாட்டில் ஒரு [7]**மதுராவும்,** கீழை இந்தியத் திட்டுகளில் ஒரு **மதுராவும்** இருக்கின்றன. இம் மதுரை மன்னர்களைப் பாண்டி யர்கள் என்றும் சிற்சில இடங்களிற் பாண்டு என்றும் சிங்கள மகாவமிச நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதனாலும் இப் பெயருக்கும் வடமொழிப் **பாண்டு** என்ற சொல்லுக்கும் தொடர்பிருந்ததாகக் கருதிக்கோடல் பிழையாகாது. பாண்டி யர் என்பது அரசுரிமை பூண்ட ஒரு முதுகுடியின் பெயராகவே முதற்கண் இருந்திருத்தல் வேண்டும்.

இனி, [8]மெகாஸ்தெனீஸ் என்பவர் தம்முடைய வரலாற்று நூலிற் [9]**பண்டையீ** என்ற இந்திய நாடொன்றைக் குறித்து எழுதியுள்ளார். அந் நாட்டிற்கு அப் பெயர் இந்திய வீமனா கிய கிருஷ்ணன் என்பவனுடைய ஒரே மகளின் பெயரைப் பற்றி இடப்பட்டதாகும் என்றுஅவர் குறித்துள்ளார். அவர் குறித்துள்ளது பாண்டி நாட்டையே என்பது பற்றி எட்டுணை யும் ஐயமின்று. [10] "**அந்தாரீ**", "**கலிங்கீ**" என்ற பெயர் களைக் கேட்டறிந்துள்ள அவர் பாண்டியர்களைப் பற்றிக் கேட்டிராதிருந்திருக்க முடியாது. ஆனால், கேட்டவற்றைப் பிறழ உணர்ந்து ஒன்றை விட்டொன்றாக மாற்றிக் கூறி யிருத்தல் கூடும். எனினும், அவர் பாண்டிய நாட்டைப் பாண்டுவோடு பொருத்திக் கூறியிருத்தல் ஒப்பத் தகுந்த தேயாம். மகாபாரதக் கதை இக்காலை யுள்ள விரிவு நிலையில்

1. Katyayana. 2. Professor Max Muller. 3. Mutra. 4. Madura 5. Methora. 6. Harivamsa. 7. Matura. 8. Megasthenes. 9 Pandaii. 10. The Andarae and Calingae.

அக் காலை இருந்திருக்கக் கூடும் என்று உறுதி கூறுதற் கில்லை. அவ்வாறு இருந்திருக்கக் கூடும் என்று வைத்துக் கொண்டால் அதன்கண் காணப்படும் வரலாற்றுக் குறிப்பொன்றையே மெகாஸ்தெனீசும் குறித்துள்ளார் என்று எளிதில் நம்பலாம். ஐம் பெரும் பாண்டவர்களில் ஒருவன் அருச்சுனன்; அவன் கிருஷ்ணனின் சிறந்த நண்பன். அவன் "தீர்த்த யாத்திரை" செய்து வந்த காலத்துப் பாண்டியன் ஒருவன் மகளை மணந்து கொண்டான். இது மகாபாரதக் கதை. மெகாஸ்தெனீஸ் கூறியுள்ள நாட்டு வளமெல்லாம் இப் பாண்டியன் நாட்டிற்கே முற்றிலும் பொருத்தமாக உள்ளது. அதிலும் முத்துக் கொழிக்கும் நாடு என்று அவர் கூறியிருப்பது கொண்டு பாண்டிய நாடுதான் அஃது என்பது உறுதியாகக் கொள்ளப் படும்.

இனி மெகாஸ்தெனீசுக்குப் பின் வந்த பிளைனி என்பார் இந்தியாவிலுள்ள பலவகுப்பு மக்களுக்குள் ஒரு வகுப்பினர் [1]பாண்டி என்னும் பெயரினர் என்றும், அவ் வகுப்பினர் இராணிகளால் ஆளப்பட்டு வருகின்றனர் என்றும் குறித்துள்ளார். மலையாள நாட்டில் மருமக்கள் தாயம் இன்றுகாறும் வழங்கி வருவது கொண்டு பிளைனி கூறியது மலையாள நாட்டைத்தான் என்று கொள்ளலாகாதோ எனின், அம் மலையாள நாட்டிலும் தம் காலத்திற் பாண்டியர் ஆட்சி பல இடங்களிற் பரவி யிருந்தது என்று அவரே கூறியுள்ளமையால், அவரும், அவருக்கு முன் வந்த மெகாஸ்தெனீசும் குறிப்பிட்டது [2]பாண்டிய நாட்டையே என்பது பொருந்தும்.

**சோழர்**:—சோழர் என்ற பெயர்க் காரணம் நன்கு புலப்படவில்லை. அசோகர் கல்வெட்டொன்றில் அது, [3]**சோடா** என்று காணப்படுகிறது. சாளுக்கிய மரபினரின் தெலுங்குக் கல்வெட்டுகளிலும் அஃது அவ்வாறே காணப்படுகின்றது. தெலுங்கர் அதைச் சோளர் என்று மொழிகின்றனர். இந் நாட்டை ஹியூன் சாங் என்ற சீன யாத்திரிகர் "சோழிய நாடு" என்று குறிக்கின்றனர். இஃது எவ்வாறு சோழ நாட்டோடு பொருந்தும் என்பது விளங்கவில்லை[4]. ஆனால்

1. Pandie. 2. அருச்சுனன் பாண்டி நாட்டரசி அல்லியை மணந்ததும், அல்லி பாண்டிநாட்டு ஆட்சி நடத்தி வந்ததும் ஈண்டுக் குறிப்பிடற்பாற்று. 3. Choda. 4. சோழ நாட்டு மக்கள் சோழியர் எனப்படுவர். வேளாளர் வகுப்பினர் சோழநாட்டிற் சோழிய வேளாளர் என்றும், பாண்டியநாட்டிற் பாண்டிய வேளாளர் என்று பெயர் பெறுவர். "முன் குடுமிச் சோழியா" என்ற காளமேகப் புலவரின் வாக்கையும் நோக்குக.

கி. பி. பதினோராம் நூற்றாண்டில் வடசர்க்கார்க் கூற்றங்கள் சோழர் அரசாட்சியின் கீழ் இருந்தன என்பது குறிப்பிடற்பாற்று. சோழர்களின் பழைய நாடு காவிரிக் கரையிலுள்ள செழுமை வளம் நிறைந்த தஞ்சை திருச்சிக் கூற்றப் பகுதிகளாகும். பின்னர் அவர்கள் காவிரிக்கு வடக்கேயுள்ள தமிழ் நாடு முழுதையும் ஒருகாலத்திற் கட்டி ஆண்டுவந்தனர். அவர்களுடைய தலைநகரம் முதலில் **உறையூர்ப்** பதியாம். உறையூர் உறைவிடம் என்றே பொருள்படுதற் காண்க. இவ்வூருக்குக் **கோழி** யென்றும் ஒரு பெயருண்டு. கி. பி. பதினோராம் நூற்றாண்டிற் சோழராதிக்கம் உச்ச நிலையிலிருந்தது. அவர்கள் தமிழ்நாடு முழுதிலுமேயன்றிப் பாண்டிய நாடு, சேர நாடு, ஈழ நாட்டின் வட பகுதி, தெலுங்கு நாட்டில் ஒரு பகுதி ஆகியவற்றிலும் ஆணை செலுத்திவந்தார்கள்.

**சேரர் :—** சோழர் மொழிக்கும் பாண்டியர் மொழிக்கும் வேறுபாடில்லை. எட்டாம் நூற்றாண்டிற்குரிய வீரிய, யூதியக் கல் வெட்டுக்களின் உதவி கொண்டு நோக்குமிடத்துச் சேரர் மொழியிலும் வேறுபாடிருந்ததாகக் காண்பதற்கில்லை. சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் ஆகிய மூவரும் திராவிடர்களே. அவர்கள் தமிழர்கள் அல்லது திராவிடர்கள் என்ற ஒரே பெயராலேயே வழங்கப்பட்டு வந்துள்ளனர்.

தமிழ்ப் பண்டைய வரலாற்றின்படி சேர சோழ பாண்டியர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிக்கும் சிறு கதை யொன்றுண்டு. சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் உடன்பிறந்தோர்கள். அவர்கள் முதலில் கொற்கை என்னுமிடத்தில் அரசுபுரிந்துவந்தனர். இக் கொற்கை தாமிரபர்ணி ஆற்றின் கரையில் உள்ளது. அவ்வாற்றின் கரையிலேயே தென்னிந்திய நாகரிகக் கலை வளர்ந்ததாகக் கூறலாம். உடன்பிறந்தோராகிய அம் மூவர்களும் பிரியவேண்டிய காலம் வந்தது. பாண்டியன் கொற்கையிலேயே தங்கினன். சேரனும், சோழனும் வெளியிற் புறப்பட்டனர். இருவர்களும் முறையே சேர சோழ அரசுகளை நிலைநிறுத்தினர். இக் கதையினை யொத்த கதைகள் பல வடமொழி நூல்களிலுங் காணப்படுகின்றன. ஹரிவமிசத்தில், பாண்டியன் கேரளன், கோலன், சோழன் என்பவர்கள் ஆக்ரீடன் என்பவனுடைய பிள்ளைகளாவர் என்று குறிப்பிடப்படுகின்றனர். துஷ்யந்தனின் பிள்ளைகள் அவர்கள் என்று கூறுவாருமுளர். கோலர் என்ற இப் புதிய குடியினர் யாவர்? கருநாடர்களே அவர்கள் என்று புராணங்கள் சில கூறும். ஆயினும் அவர்கள் **கோலேரிய மரபினரே என்றுகொள்ளுதலே சால்புடைத்தாம்,**

# 'காலம்' என்னுஞ் சொல் எம்மொழிக்குரியது?

[வித்துவான். ஞா. தேவநேயப் பாவணர்.]

வடமொழிக்கும் தென்மொழிக்கும் பொதுவாகவோ, அவ்விரண்டனுள் ஒன்றற்கே சிறப்பாகவோ உரிய பல சொற்கள் பற்றி, அவ்விருமொழியாளர்க்கும் தொன்றுதொட்டு நிகழ்ந்துவரும் போர் கற்றூர் அனைவர்க்கும் தெரிந்ததே. அச் சொற்களுள் 'காலம்' என்பதும் ஒன்றாகும்.

ஒரு சொல்லை ஒரு மொழிக்குரியது என்று கூறுவதற்கு ஒப்பியன் மொழிநூல் (Comparative Philology) அறிவு இன்றி யமையாது வேண்டப்படும். இந்தியாவில், சிறப்பாய்த் தமிழ் நாட்டில், மொழிநூல் என்னும் பெயரையே கேட்டறியாதாருங் கூட, வடமொழிப்பற்றொன்றே காரணமாகப் பல தென் சொற்களை வடசொற்களாகக் கூறி வருகின்றனர். அவருள்ளும் ஆங்கிலக் கல்விப்பட்டம் பெற்றவரோவென்றால், தம்மை எல்லா மொழிகளிலும் வல்லுநரென்றே எண்ணிக்கொள்கின்றனர். மொழிநூல் என்பது பொதுக் கல்வியினின்றும், அல்லது இலக்கிய விலக்கணக் கல்வியினின்றும் வேறான ஓர் தனிக்கலை என்பதை அவர் சற்றும் உணர்ந்திலர்.

பொதுவாக, வடமொழிப்பற்றினரெல்லாம் வடமொழி நூல்களிலும் அகராதிகளிலும் உள்ள சொற்களெல்லாம் வடமொழிச் சொற்களே என்று எண்ணிக்கொள்கின்றனர். உலகத்திலுள்ள பலவேறு மொழிகளும் தம்முள் எவ்வளவோ வேறுபாடுடையவேனும், ஒரு மரத்தின் பல்வேறு கிளைகள் ஓர் அடி மரத்தினின்றே கிளைத்துள்ளது போல, ஓர் மூலமொழியினின்றே கிளைத்துள்ளனவாகும். சில சொற்களிலும், இலக்கண நெறி முறைகளிலும் உலக மொழிகளெல்லாம் ஒத்திருப்பதே இதற்குப் போதிய சான்றாம். உலகத்திலுள்ள பல்வேறு மக்கட்குலங்களும் ஒருதாய் வயிற்றின என்பது இற்றையாராய்ச்சியால் தெரியவருதலின், அவற்றால் பேசப்படும் பல்வேறு மொழிகளும் ஒரு மூலத்தின என்றே கொள்ளத்தகும்.

ஐயாயிரம் மைலுக்கப்பாற்பட்ட இலத்தீன், கிரேக்கமொழிகட்கும் தமிழுக்கும் பொதுவான சில சொற்களுள.

உ-ம். Navis (Lat)=நாவாய். Palios (Gr.).=பழைய.

இரு குலத்தார் அல்லது நாட்டார் கலந்து அல்லது அடுத்தடுத்து வாழின், சில பொருள்களைத் தமக்குட் கொண்டுங் கொடுத்தும் மாற்றிக்கொள்வதுபோலச் சில சொற்களையும் மாற்றிக் கொள்வர். உதாரணமாக, ஆங்கிலருக்கும் தமிழருக்கும் தொடர்புண்டானபின் Father (பாதிரி), Battalion (பட்டாளம்) முதலிய ஆங்கிலச்

சொற்கள் தமிழிலும், பண்டி (bandy), தோப்பு (tope) முதலிய தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்திலுமாகக் கலந்துள்ளன.

வடமொழியும் தென்மொழியும் ஐயாயிரம் ஆண்டுகளாக அடுத்தடுத்து வழங்கினமையின், ஏற்கனவே இவ்விரண்டிற்கும் உள்ள பொதுச் சொற்கள் நீங்கலாக, புதிதாக ஒன்றினின்றொன்று கடன் கொண்டுள்ள சொற்கள் எத்துணையோ பலவாம். வடமொழியிலும் தமிழ்ச் சொற்கள் அல்லது திராவிடச் சொற்கள் உண்டென்பதைக் காலஞ்சென்ற கால்டுவெல், குண்டர்ட் என்னும் இரு பெரு மொழி நூலாராய்ச்சியாளர் எடுத்துக்காட்டியுள்ளனர். இவருள் முன்னையவர் வடசொற்களையும் தென் சொற்களையும் பிரித்தறிவதற்கும் விதிகள் வகுத்திருக்கின்றனர். அவற்றுள் முக்கியமானவை இரண்டு. அவை யாவன :—

1. ஒரு சொல் எந்த மொழியில் பல்வேறு வடிவங்களுடனும் இனச்சொற்களுடனும் மூலப்பொருளைத் தாங்கிக்கொண்டு பெரு வழக்காய் வழங்குகின்றதோ, அந்த மொழிக்கே அஃது உரியது என்பது.

2. வடமொழியிலும் தென்மொழியிலும் வழங்கும் ஒரு சொல் வடமொழியின் இனமான மேனாட்டு மொழிகள் ஒன்றிலுங் காணப் படாமல், தமிழின் இனமான மற்றெல்லாத் திராவிட மொழிகளிலுங் காணப்படுமாயின், அது தமிழுக்கே உரிய சொல்லாம் என்பது.

வடமொழி தேவமொழியென்றும், பிற மொழிகளெல்லாம் தன்னிடத்திற் கடன்கொள்ளத் தான்மட்டும் ஒரு சொல்லும் பிற மொழியினின்று கடன் கொள்ளாது தனித்தியங்கும் தூய்மைவாய்ந்த தென்றும் சில வடமொழிவாணர் பொய்யும் புலையும் மலிந்த புராணக் காலத்தன்றி, ஆராய்ச்சிமிக்க இக்காலத்தும் பிதற்றுவது, மிகவும் எள்ளிநகையாடத் தக்கதன்றி வேறு என் செயற்பாலது ?

வடமொழி இக்காலத் தமிழிற் பெரிதுங் கலந்திருப்பதால் ஏற்கனவே இவ்விரண்டிற்குமுள்ள பொதுச் சொற்களோடு, புதிதாய் வடமொழிக்குச் சென்ற தமிழ் அல்லது திராவிடச் சொற்களையும் வடசொற்களே யென்று நடுநிலை ஆராய்ச்சியில்லா வடமொழிப்பற்றின ரெல்லாம் நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைகின்றனர். ஆங்கிலச் சொற்கள் நூற்றுக்கு முப்பது வீதம் இற்றைத் தமிழில், தெருப் பேச்சிற் கலந்திருப்பினும், நூல்வழக்கிற் கலந்திலது. அங்ஙனம் ஒருகால் நூல்வழக்கினும் கலக்குமாயின், பின்னர் ஆராய்ச்சியில்லா தார் all, beetle, crack, derive, ear, fear, galley, hail, in, jury, kill, locality, mess, near, one, put, quoth, roll, shrink, through, un, vain, want, yean, zenith என்ற ஆங்கிலச் சொற்களேமுறையே எல்லாம், விட்டில், கிறுக்கு, திரி, ஏர், வெரு, கலம், ஆலி, இல், சூள், கொல், இலக்கு, மிசை, நெருங்கு, ஒன்று, போடு கூறு, உருள், சுருங்கு, துருவ, அல், வீண், வேண்டு, ஈன், சென்னி

என்னுஞ் சொற்களாகத் திரிந்துள்ளன என்று கூறுவரன்றோ? இங்ஙனமே வடசொற்களின் திரிபாகப் பல தூய தென் சொற்களைக் கூறுகின்றனரென்க.

இங்ஙனம் கூறுவோர் தமிழின் சொல்வளத்தையும் ஒருசிறிதும் நோக்குகின்றிலர். உண்மை என்னும் குணம் நினைவு சொல் செயல் என்ற மூன்றையும் தழுவியது என்பதை உணர்த்தற்குத் தமிழில் உண்மை (உள் = மனம்), வாய்மை (வாய்), மெய்ம்மை (மெய் = உடம்பு) என மூவேறு சொற்கள் உள. மரத்தின் உறுப்புக்களில் ஒவ்வொன்றிற்கும் அதனதன் வேறுபாட்டிற்கேற்ப வெவ்வேறு பெயர் உளது. இலையென்னும் ஒரே யுறுப்பிற்கு இலை; தாள், தோகை, ஓலை என நான்கு சொற்கள் உள்ளன. ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு தன்மையைக் குறிக்கும். பூவின் வெவ்வேறு நிலைகளைக் குறித்தற்கு வெவ்வேறு சொற்கள் உள்ளன. முதலாவது தோன்றும் போது அரும்பு; பேரரும்பாயின் போது; மலர்ந்தபின் மலர்; விழுந்த பின் வீ; வாடியபின் செம்மல். உள்ளத்தின் வெவ்வேறு தொழிற்கும் வெவ்வேறு சொல் உளது. உ-ம். உள்(ளு), to will; உணர் to feel, to comprehend; நினை, to think. to remember; நினைவுகூர், to remember, to commemorate; உன்(னு), to imagine, (உன்னம் = imagination); எண்(ணு), to deliberate. to consider; கருது, to conceive (கருத்து = concept, idea); அறி, to know, கொள், to opine, (கோள் = opinion, கொள்கை = doctrine); மதி, to estimate, to regard; முன்(னு), to propose; முன்னிடு, to propose, to set before, (முன்னிட்டு = having proposed, having set before, for the purpose of); தீர்மானி, to determine, to resolve; நய, to appreciate; தெருள் to perceive clearly. இங்ஙனம் தமிழிற் பல பொருளும் பற்றிப் பல சொற்களிருப்பவும் இவற்றைக் கவனியாதும், இவற்றின் நுட்பவேறுபாடுகளை ஆராயாதும், இவற்றுட் சிலவற்றை வடசொல்லென மயங்கியும், தமிழிற் பொருளுணர்த்தப் போதிய சொல்லில்லை யென்று பழித்துத்திரிவர்.

இவற்றுள், மதி யென்னுஞ் சொல் எல்லா மொழிகட்கும் பொதுவான மூல மொழிச் சொல்லாகும். அம்மூல மொழிக்குப் பிறமொழிகளினும் தமிழ் மிக நெருங்கியதென்பது மொழிநூல் ஆராய்ச்சியால் விளங்கும். இதுபற்றிக் கால்டுவெல் ஐயரும் பின்வருமாறு கூறுகின்றார். (எவரும் எங்ஙனமும் ஐயுறாமைப் பொருட்டு அவர் கூற்றின் மூலத்தையே மொழிபெயர்க்காது) இங்குத் தருகின்றேன்.

"Nevertheless, I regard the comparison of words, when carefully and cautiously conducted, as an important help to the determination of lingual affinities, and it will be found, I think, that the following vocabularies bear independent testimony, in their own degree, to the same result at which we arrived by grammatical comparison viz. that the Dravidian idioms exhibit

traces of an ancient, deep-seated connection with Pre-sanskrit—the assumed archaic mother-tongue of the Indo-European family, whilst at the same time the traces they exhibit of relationship to the languages of the Scythian group, especially to the Ugrian tongues, are on the whole, closer, more distinctive, and more essential." (Comparative Grammar of the Dravidian Languages, p. 452).

மேற்கூறியவாறே காலத்தைக் குறிப்பதற்கும் தமிழிற் பல சொற்களுள. அவை கால், பொழுது, வேளை, கொன், செவ்வி, அற்றம், எல்லை, சமையம், நேரம், ஞான்று, பதம் முதலியனவாம்.

இவற்றுள் கால் என்பது காலை, காலம் எனத் திரிந்து நெடுங் காலத்தையும் குறுங்காலத்தையும் குறிக்கும். ஏனையவெல்லாம் குறுங் காலத்தையே குறிக்கும். பொழுது என்பது போழ்து, போது எனத் திரியும். பெரும்பொழுது என்பது இரு மாதங்கொண்ட பருவத்தை நம் (season) சிறுபொழுது என்பது நான் மணி நேரங்கொண்ட நாட் பகுதியையுங் குறிக்கும். வேளை என்பது நாட்பகுதியைக் குறிக்கும்; செய்யுளில் வேலை என்றும் திரியும். கொன் என்பது உரிய தீய காலத்தையும், செவ்வி என்பது தகுந்த நற்சமயத்தையும், அற்றம் என்பது தகுந்த தீச்சமயத்தையும் குறிக்கும். எல்லை என்பது எல்லை யென்றுங் குறுகும். சமையம் என்பது அமையமென்றும் திரிந்து, தகுந்த வேளையை அல்லது பருவமான நிலையைக் குறிக்கும். நேரம் என்பது ஒரு குறித்த நேரத்தையும் ஒரு வினை நிகழ்ச்சிக்குரிய காலத்தையும் (duration) குறிக்கும். பதம் என்பது ஒரு பொருளின் செவ்வையான நிலையைக் குறிக்கும். ஞான்று என்பது போது என்பதைப் போன்றது.

கால், காலை, பொழுது, வேளை, எல்லை, சமையம், நேரம், ஞான்று, பதம் என்னும் சொற்கள், வந்தகால், வந்தகாலை, வந்த பொழுது, வந்தவேளை என ஒரு குறித்த நேரத்தையுங் குறிக்கும்.

ஒரு நாளின் ஒளி இருள் வேளைகளைக் குறிப்பதற்குப் பகல் இரவு என்னுஞ் சொற்களும், ஒரு நாளிற் காலை 6 மணி முதல் நந் நான்கு மணி நேரமாகவுள்ள அறுவகைச் சிறு பொழுதுகளையுங் குறிப்பதற்குக் காலை நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்னுஞ் சொற்களும் உள்ளன. வேலைக் காலத்தைக் கணிப்பதற்கு 24 நிமிட நேரங் கொண்ட நாழிகை என்னும் அளவுள்ளது.

ஒரு வாரத்தின் எழு நாட்களும் ஞாயிறு, திங்கள், செவ்வாய் அறிஞன், வியாழன், வெள்ளி, காரி எனப்படும். இவற்றுள், அறிஞன் காரி என்னும் இரண்டிற்கும் பதிலாகப் புதன், சனி என்னும் வட சொற்கள் வழங்கிவருகின்றன. வாரம், கிழமை என்பன உரிமை என்னும் ஒரு பொருட் சொற்கள். [காரி=கரியது. 'கரியவன்' என்று சிலப்பதிகாரத்துள்ளும் (10: 102), 'மைம்மீன்' என்று புறநானூற்றுள்ளும் (117) வந்திருத்தல் காண்க. மை=கறுப்பு.]

இருவாரம் சேர்ந்தது ஒரு பக்கம் எனப்படும். இதையே பக்ஷம் என்பர் வடமொழியார். ("ஆடித்திங்கட் பேரிருட் பக்கத்து" சிலப். 23: 133. பக்கம்=பகுதி; இருட்பக்கம்=கிருஷ்ண பக்ஷம்.)

இருபக்கம் சேர்ந்தது ஒரு திங்கள் (மாதம்).

இரு திங்கள் சேர்ந்தது ஒரு பெரும்பொழுது. சித்திரை முதல் பங்குனி யீறாக, இவ்விரு மாதமாய், முறையே, இளவேனில் முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறு பெரும்பொழுதுகளாகும். இவை மிகப் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டிருப்பதுடன் இன்றும் தமிழ் நாட்டிற்கே பொருந்துவனவாயுள்ளன. ஆகையால் இவற்றுக்கு வடமொழியிற் கூறும் பெயர்களெல்லாம் மொழிபெயர்ப்பே.

பன்னிரு மாதங்கட்கும் இப்போது வழங்கிவரும் பெயர்கள் வடசொற்களே. இவற்றுக்கும் பதிலாகப் பன்னீர் இராசிப்பெயர்களே மலையாள நாட்டிற்போல் பண்டைத் தமிழ் நாட்டிலும் வழங்கிவந்தன. பன்னீர் இராசிப் பெயர்களில் மேடம் (மேழம்), இடபம், கடகம், கன்னி, துலாம், கும்பம், மீனம் என்னும் ஏழும் தமிழ்ச் சொற்கள் அல்லது தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான சொற்கள். இவற்றுள் முதலாறுக்கும் முறையே தகர், குண்டை, அலவன், மடந்தை, தூக்கு, குடம் என்றும் பெயர்களுண்டு. ஏனைய மிதுனம், சிங்கம், விருச்சிகம், தனுசு, மகரம் என்னும் ஐந்தும் தமிழில் முறையே இரட்டை, ஆளி, தேள், வில், சுறா எனப்படும். இராசிக்குத் தமிழில் ஓரை என்று பெயர்

பன்னிரு மாதங்களும் இராசிப் பெயர் பெறுமாறு.—

| | | | |
|---|---|---|---|
| 1. | சித்திரை—மேடம் | 7. | ஐப்பசி—துலாம் |
| 2. | வைகாசி—இடபம் | 8. | கார்த்திகை—விருச்சிகம் |
| 3. | ஆனி—மிதுனம் | 9. | மார்கழி—தனுசு |
| 4. | ஆடி—கடகம் | 10. | தை—மகரம் |
| 5. | ஆவணி—சிங்கம் | 11. | மாசி—கும்பம் |
| 6. | புரட்டாசி—கன்னி | 12. | பங்குனி—மீனம் |

அசுவனி முதல் ரேவதி யீறான இருபத்தேழு நட்சத்திரங்கட்கும் தமிழிற் பெயருண்டு. அவை முறையே புரவி, அடுப்பு, ஆரல், சகடு, மான்றலை, மூதிரை, கழை, காற்குளம், கட்செவி, கொடுநுகம், கணை, உத்தரம், கை, அறுவை, விளக்கு, முறம், பனை, துளங்கொளி, குருகு, உடைகுளம், கடைக்குளம், முக்கோல், காக்கை, செக்கு, நாழி, முரசு, தோணி என்பன. இவற்றை நிகண்டுகளிற் கண்டு கொள்க.

ஆண்டு, முயற்சி, சொல், நஞ்சு, மகிழ்ச்சி, நோய், விருப்பம், ஊதியம், இழப்பு, வருத்தம், நிலா, ஆசிரியன், கோயில், நீர், முழுக்கு, குளிப்பு, சோறு, தேர், திருவிழா, பறவை, விலங்கு, மேலாடை, இல்லம்புகல், சாப்பாட்டுக்கடை, வலம்வரல், சிலம்பு கழித்தல் அல்லது,

காப்புக் கழற்றல், நீடுவாழி, மூத்த மகன், தம்மரசு, இருமையும் ஒத்து, என்னும் செந்தமிழ்ச் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் முறையே, வருஷம், பிரயாசை, வார்த்தை, விஷம், சந்தோஷம், வியாதி, இஷ்டம், லாபம், நஷ்டம், கஷ்டம், சந்திரன், உபாத்தியாயர், ஆலயம், ஜலம், அபிஷேகம், ஸ்நானம், சாதம், ரதம், உற்சவம், பக்ஷி, மிருகம், அங்கவஸ்திரம், கிருகப்பிரவேசம், போஜனசாலை, பிரதக்ஷிணம் (செய்தல்), கங்கண விஸர்ஜனம், சிரஞ்சீவி, ஜேஷ்ட குமாரன், சுயராஜ்யம், உபயானு சம்மதமாய் என்னும் வடமொழிச் சொற்களும் சொற்றொடர்களும் வழங்கி வருகின்றன. இங்ஙனம் தமிழில் வழங்கும் வடசொற்களும் சொற்றொடர்களும் பன்னூற்றுக் கணக்கின. இவை போன்றவையே பன்னிரு மாதங்கட்கும் இருபத்தேழு நட்சத்திரங் கட்கும் இதுபோது வழங்கும் வடசொற்களும் என்க.

நட்சத்திரம் தமிழில் நாள் அல்லது நாண்மீன் எனப்படும். பொதுவானதாயின் மீன் என்றும் உடு என்றும் வெள்ளி என்றும் கூறப்படும். ஒரு பகலும் ஓர் இரவுஞ் சேர்ந்து ஒரு கிழமை. ஒரு கிழமைக்குரிய நட்சத்திரம் நாள். "நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை" என்றார் ஔவையார். ஆயினும், நாள் என்பது கிழமை யென் னும் பொருளிலேயே இருவகை வழக்கிலும் பெரும்பாலும் வழங்கி வரும். கிரகம் கோள் அல்லது கோண்மீன் எனப்படும்.

அறுபதாண்டிற் கொருமுறையாக நிகழ்ந்த சில பஞ்சங்கள் பற்றி, அல்லது மக்களின் சராசரி வாழ்நாள் பற்றி, அறுபதாண்டு என்னும் அளவு பண்டைத் தமிழ் நாட்டில் சில முதியோர்க்குள் பெயரளவாய்மட்டும் வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. அது நடைமுறையிற் கணிக்கப்படவில்லை. சாலிவாகனனாலேயே அறுபதாண் டிற்கும் பெயரிடப்பட்டதாகத் தெரிகின்றது. அவை யாவும் வட சொற்கள். அவற்றுக்குத் தென்சொல் இல்லை. அறுபதாண்டுச் சக்கரம் சுற்றிச் சுற்றி வருதலின், அஃது ஆங்கில ஆண்டு போலச் சரித் திரத்திற்கும் நெடுங்காலக் குறிப்பிற்கும் பயன்படுவதன்று. பண்டைத் தமிழர் அவ்வவ்வரசரின் ஆட்சிக் காலத்தைக்கொண்டே ஓர் ஆண் டையோ நெடுங்காலத்தையோ குறித்தும் கணக்கிட்டும் வந்ததாகக் கல்வெட்டினின்றும் தெரியவருகின்றது. (உ-ம். கோப்பரகேசரி மாற வர்மனுக்கு 24-ம் ஆண்டு). ஒரு நெடுங்காலத்தைக் கணக்கிடுவதற்குப் பல அரசர்களின் ஆட்சிக் காலத்தைக் கூட்டவேண்டியதிருக்கும். ஏனெனில் அடிக்கடி அரசர் மாறுவது வழக்கம். (சரித்திரகாலத்தில்) ஓர் அரசன் எவ்வளவு நீடித்தாளினும் நூறாண்டிற்கு மேற்படுவது மிகவும் அருமை. இக்குறையை நீக்குதற்கு ஒரு பெரியார் காலத்தி னின்று, அல்லது ஒரு நகரத் தோற்றத்தினின்று, அல்லது ஒரு பெரு நிகழ்ச்சியினின்று நெடுங்காலத்தைக் கணக்கிட்டு வந்திருக்கின்றனர். இவற்றுக்கு முறையே மெய்கண்டான் யாண்டும், கொல்லம் ஆண்டும், கலியாண்டும் உதாரணமாகும். ஆங்கில முகம்மதிய ஆண்டுகளும் பெரியார் காலத்தினின்றும் கணக்கிடப்படுவனவே.

அறுபதாண்டிற்கு மேற்பட்ட ஊழி என்னும் அளவு, பண்டைத் தமிழ் நாட்டில் நிகழ்ந்த சில கடல்கோள்கள்பற்றி, ஒரு வரையறையின்றி ஈரழிவிற் கிடைப்பட்ட அல்லது ஒரு விரிவளர்ச்சி (Evolution) யைக் குறிக்கின்ற ஒரு நெடுங்காலத்தைக் குறிக்க அல்லது கணிக்க வழங்கி வந்தது. இது "இவ்வாசிரியர் (தொல்காப்பியர்) ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் (தொல்காப்பியம்) செய்தலின்" என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியக் கற்பியல் 4-ம் சூத்திர வுரையிற் கூறுதலானும், ஐம்பூதங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஊழியில் தோன்றிற்றென்று பரிபாடல் (2: 3-19) கூறுதலானும் அறியப்படும். ஆகையால் இதுபோது பஞ்சாங்கத்திற் குறிக்கப்பட்டுள்ள யுக அளவு தமிழர் ஊழிக்குப் பொருந்துவதன்று; தமிழ் நாட்டுக் கடல்கோள்களின் இடைக்காலங்கள் அவ்வக்காலத்திற் கணிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அதைப்பற்றிய ஒரு குறிப்பும் நமக்குக் கிடைத்திலது. இற்றைக் கலியூழி தலைச்சங்கத்திறுதியில் நிகழ்ந்த கடல்கோளினின்றும் கணிக்கப்பட்டதாயின், கலியுகம் தொடங்கி 5041 ஆண்டுகள் ஆயின என்னும் கணக்குப் பொருந்துவதாகும்.

மேற்கூறிய காலப் பெயர்களுள் 'காலம்' என்னுஞ் சொல்லையே சிறப்பாகக் கூற எழுந்ததிக்கட்டுரையாதலின், அதன் மூலத்தையும் அது எம்மொழியைச் சேர்ந்ததென்பதையும் இனி ஆராய்வோம்.

காலம் என்னும் சொல், கால் என்னும் மூலத்தினின்றும் பிறந்தது. இது, கால் எனுஞ் சொல் தனித்தும், ஒருகால், வந்தக்கால் எனத் தொடர் மொழிகளிலும் வந்து காலப்பொருள் தருவதால் அறியப்படும். தூண் என்பது 'அம்' ஈறு பெற்றுத் தூணம் என்றாற்போலக் கால் என்பதும் 'அம்' ஈறு பெற்றுக் காலம் என்றாயது. 'ஐ' ஈறு பெறின் காலை என்றாகும்; பார் (கம்பி) என்பது பாரை என்றானாற்போல.

கால், காலை, காலம் என்னும் மூன்று சொற்களும் தமிழில் இருவகை வழக்கிலும் மிகப் பெருவழக்காக வழங்கிவருகின்றன.

கால் என்பது 'ஒரு கால்' 'முக்காலும்' என்னும் தொடர்களிலும், 'வந்தக்கால்' 'போனக்கால்' என எதிர்கால வினையெச்சங்களிலும் உலக வழக்கில் வழங்குகின்றது. இவ்வினையெச்சங்களை 'வந்தாக்கா' 'போனாக்கா' என்று சிதைத்து வழங்குவர் தமிழ் நாட்டின் வடமேற் பகுதியிலுள்ளவர்.

"பின் முன் கால்கடை வழிஇடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'கால்' என்பது ஓர் வினையெச்சவிகுதியாகக் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியம் எவ்விதத்தும் இற்றைக்கு 3000 ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

காலை என்பது ஒரு நாளின் சிறந்த காலை அல்லது வேளையாகிய விடியற்காலத்தை உணர்த்தும். காலை, விடிகாலை என்பன உலக வழக்கு. "காலையும் மாலையும் கைகூப்பிக் கால் தொழுதால்" எனச் செய்யுள் வழக்கிலும் அச்சொல் அப்பொருளில் வந்தது. காலை என்னும் சொல் முற்பகலையும், முற்பகலின் முற்பகுதியையும் குறிப்பதுமுண்டு.

" இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை "
" இசையுட னருகும் தெரியுங் காலை "

எனத் தொல்காப்பியத்தில், காலை என்னுஞ் சொல் பொழுது, வேளை என்னுஞ் சொற்கள்போல ஒரு குறித்த நேரத்தை உணர்த்திற்று.

காலம் என்னும் சொல் ஒரு குறித்த காலத்தையும் விடியற் காலத்தையும், பருவகாலத்தையும், ஒரு காலப் பகுதியையும் பொதுவான காலத்தையும் உணர்த்தும். 'விடியற்காலம்' 'சாயங்காலம்' 'இராக்காலம்' 'பேறுகாலம்' 'துன்பகாலம்' 'காலத்தாற் செய்த நன்றி' (குறள்), 'ஆயியல் நிலையுங் காலத்தானும்' (தொல்காப்பியம்) என்னுந் தொடர்களில் ஒரு குறித்த காலமும் 'காலத்தாலேயெழுந்து' (காத்தாலையெழுந்து என்பது கொச்சை வழக்கு) என்னுந் தொடரில் விடியற்காலமும்; வேனிற்காலம் (கோடைகாலம்), மழைகாலம் (கார்காலம்) முதலிய தொடர்களில் பருவகாலமும்; முற்காலம், தற்காலம், கற்காலம் 'கீழோர்க்காகிய காலம்' (தொல்) முதலிய தொடர்களில் ஒரு காலப்பகுதியும் 'பொருள் இடம் காலம் சினை குணம் தொழில்,' என்னுந் தொடரில் பொதுவான காலமும் குறிக்கப்பட்டன.

ஆங்கிலத்தில் 'Tense' என்று கூறும் வினையிலக்கணத்தைக் குறிக்கத் தமிழில் காலம் என்னும் சொல்லே கொள்ளப்பட்டுள்ளது.

" வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் "

" காலந் தாமே மூன்றென மொழிப "

" இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக்காலமும் குறிப்பொடுங் கொள்ளும் "

(தொல். வினையியல் 1, 2, 3.)

வினைச்சொல் காலங்காட்டுவதால் 'காலக்கிளவி' என்றும் கூறப்படும். கிளவி-சொல்.

" மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கைக்
காலக் கிளவியொடு முடியும் என்ப "

(தொல். வினையியல்—10)

தமிழ்ச் செய்யுளுறுப்புக்கள் இருபத்துநான்கனுள் காலமும் ஒன்றாகத் தொல்காப்பியத்துட் குறிக்கப்பட்டுள்ளது.

"...கேட்போர் களனே காலவகை எனாஅ..."

(தொல். செய்யுளியல். 1)

அஃறிணை முடிபுபெறும் உயர்திணைச் சொற்களுள் 'காலம்' என்பதும் ஒன்றாகக் கூறுவர் தொல்காப்பியர்.

"காலம் உலகம் உயிரே உடம்பே

..................................

பால்பிரிந் திசையா உயர்திணைமேன"

(தொல். கிளவியாக்கம், 58)

'காலம்' என்பது வடசொல்லாயின், தமிழிலக்கணம் கூறப் புகுந்த தொல்காப்பியத்தில் அதனைக் கூறார் ஆசிரியர்.

கால் என்னுஞ் சொற்குத் தமிழிற் பல பொருள்களிருப்பினும், அவற்றுள் நான்கே தலைமையானவும் பிறவற்றிற்கு அடிப்படையானவு மாகும். அவை கால் (leg), கால்வாய், காற்று (கால் + து), காலம் என்பனவாகும். இந்நான்கனுள்ளும், கூர்ந்து நோக்கின், முதலதே ஏனை மூன்றிற்கும் மூலமாகும்.

ஒரு சொற்குப் பல பொருளிருப்பின் அவை யாவும் ஒரே தொடர்புடையனவாயிருக்கும். தொடர்பின்றேல் ஒரே வடிவுள்ள வெவ்வேறு சொற்குரியனவாயிருக்கும். இங்குக் கால் என்னுஞ் சொற்குக் கூறிய நான்கு பொருளும் ஒரே தொடர்புடையனவே. எங்ஙனமெனின், 'நீண்டது' என்னும் கருத்தையே அவை நான்கும் தழுவியுள்ளன. கால் என்னும் உறுப்பு (ஒடுங்கி), நீண்டிருப்பது; கால்வாய் நீண்டு ஓடுவது; காற்று ஓரிடத்து நில்லாது திசை நெடுக நீண்டு வீசுவது; காலம் ஓர் முடிவின்றி நீண்டு செல்வது. இந் நீட்சிக்கருத்து கால் என்னும் உறுப்பினின்றே தோன்றியதாகும்.

கால் என்னும் உறுப்பின் பெயர் கால் என்னும் வினையினின்றும் தோன்றியதாகும். காலுதல் சிந்துதல், அல்லது பொழிதல். மேகங்கள் மழை பொழிவது காலுதல் எனப்படும். தூரத்தில் மழை பொழியும்போது, தூண்கள் போலப் பல படலங்களாகப் பிரிந்து வீழ்வதை என்றும் பார்க்கலாம். அவ் வீழ்ச்சிகள் மழைக்கால்கள் எனப்படும். அக்கால்கள் மேகத்திற்கு அல்லது வானத்திற்குத் தாங்கல்போலக் கீழே நீண்டு நிலத்தில் விழுவதுபோல், உறுப்பாகிய காலும் ஓர் உடம்பிற்குத் தாங்கலாய்க் கீழே நீண்டு நிலத்திற் பதிவதால், உவமையாகு பெயராய்க் காலெனப்பட்டது. பின்னர், தாங்குவது, அடியில் இருப்பது என்னும் பொருள்பற்றிக் கால் என்பது பல பொருள்கட்குப் பெயராயிற்று. முழங்கால் உடம்பிற் காற்பகுதியாதலின் காலென்பது நாலிலொரு பங்கையும் குறிப்பதாயிற்று. இதற்கு மறுதலையாகக் கூறுவர் இலக்கணிகள்.

பல்கலைக்கழக அகராதியில் (Lexicon) கால் என்னும் சொற்கு 44 பொருள்கள் கூறப்பட்டுள. அவையாவன :—

| | | |
|---|---|---|
| 1 காற்பங்கு | 12 கைப்பிடி | 23 வழி |
| 2 'வ' என்னும் இலக்கம் | 13 தூண் | 24 நடை |
| 3 பாதம் | 14 பற்றுக்கோடு | 25 இடம் |
| 4 பூவின்தாள் | 15 மூலை | 26 வனம் |
| 5 அடிப்பாகம் | 16 மரக்கன்று | 27 வின்மூலை |
| 6 'ர' என்ற எழுத்து | 17 மகன் | 28 மரக்கால் |
| 7 உருள் | 18 வமிசம் | 29 அளவு |
| 8 வண்டி | 19 இனமுறை | 30 பின்னுதற்கு வகுத்த மயிர்ப்பகுதி |
| 9 கோல் | 20 பிறப்பிடம் | 31 கிரணம் |
| 10 குறுந்தறி | 21 வாய்க்கால் | 32 மழைக்கால் |
| 11 நெசவுத்தறியின் மிதி | 22 பிரிவு | |

| | | |
|---|---|---|
| கால்=1 காற்று | கால்=1 பொழுது | 4 காலன் |
| 2 வாதநோய் | 2 செவ்வி | 5 இயமன் |
| 3 பஞ்சபூதம் | 3 தடவை | 6 கருநிறம் |

கால்=1 7-ம் வேற்றுமை உருபு
2 வினையெச்ச விகுதி
3 ஓர் உபசர்க்கம்

இந்நாற்பத்து நான்கு பொருள்களும், கால்போலக் கீழிருப்பது, தாங்குவது, நீண்டிருப்பது, பிரிந்திருப்பது, காற்பங்காயிருப்பது, நிலத்தில் ஊன்றுவது முதலிய கருத்துப்பற்றியனவாயே இருத்தல் காண்க.

கால் உடம்பில் ஓர் இடமாயிருத்தலால், அதன் பெயர் இடத்தையும் குறிப்பதாயிற்று. பந்தர்க்காலுக்குப் பெரும்பாலும் மூங்கிலை நடுவதாலும், மூங்கில் வளர்வது காட்டிலாதலாலும், மூங்கிற் குழாயை அறுத்து முகத்தற் கருவியாகக் கொள்வராதலாலும், கால் என்னும் பெயர் மூங்கில், வனம், மரக்கால் என்னும் பொருள்களையும் தரும்.

பொழுது முதலிய மூன்று பொருள்களும் காலத்தையும், காலன் முதலிய மூன்று பெயர்களும் மழைக்காலையும் மூலமாகக் கொண்டனவாகும்.

ஆங்கிலத்தில் 'column' என்னும் சொல் தூணையும் பிரிவையும் சட்டத்தையும் குறிக்கும். சட்டமும் கால், தூண், கால்வாய் இவற்றுள் ஒன்றைப் போன்றே இருக்கும். கால் என்னும் சொல் காலத்தைக் குறிக்கும்போது தமிழிலும் 'அம்' ஈறு பெறும். தூண் என்பது தூணம் என்றும் வழங்கும். ஆகையால் 'கால்' 'column

என்னுஞ் சொற்கட்கு ஓர் இயையுண்டோ என்று ஐயுறக்கிடக்கின்றது. ஆங்கில அகராதிகள் 'column' என்னுஞ் சொற்கு celsus (high), collis (a hill) முதலிய மூலங்களைக் காட்டுகின்றன. அவை அவ்வளவு பொருத்தமுடையனவல்ல. மொழிநூற்கலை இன்னும் சரியாய் வளர்க்கப்படாமையின், மேனாட்டார் தமிழின் அருமையை அறிந்திலர் என்றே கூறல்வேண்டும்.

இங்ஙனமிருப்பவும், சிலர், தமிழுக்கு நீண்டகாலத்தைக் குறிக்கச் சொல்லில்லை யென்றும், புதன், சனி, ருது என்னும் வட சொற்குத் தென் சொல்லில்லை யென்றும், 27 நட்சத்திரங்களுக்கும், 12 மாதங்கட்கும் தமிழிற் பெயரில்லையென்றும், வடமொழித் துணையின்றித் தமிழ் தனித்தியங்காதென்றும் தமிழர்க்குத் தனி நாகரிகமில்லை யென்றும், பலவாறு பிதற்றுகிற்பர். இனி, சிலர் முழுப்பூசனியைச் சோற்றில் மறைப்பதுபோல், தமிழே வடமொழியினின்று வந்தது தான் என்று வரம்பிறந்து மனப்பால் குடிப்பர். தமிழ் வடமொழிக்கு மிக முந்திய தென்பதும், வடமொழித் தோற்றத்திற்கு அல்லது ஆரியர் வருகைக்கு முன்னரே, அக்காலத்து மக்கட்குத் தோன்றிய கருத்துக்களை யெல்லாம் தெரிவிக்கும் சொற்களைத் தன்பாற் கொண்டுள்ள தென்பதும் அவர் அறியார்போலும்!

ஆரியர் இந்நாட்டிற்கு வருமுன்னரே தமிழர் பலகலைகளிலும் தேர்ந்திருந்ததினாலும், தமிழர்க்கு வானநூலும் (Astronomy) தெரிந்திருந்தமை பண்டை நூல்களால் அறியப்படுவதாலும், நொடி முதல் ஊழியீறான சிறிய பெரிய கால அளவுகட்கெல்லாம் தமிழிற் சொல்லுண்மையாலும், சொல்வளம் தமிழின் தனிப் பண்பாதலாலும், கால் என்பது ஓர் வினையெச்ச விகுதியாகவும் காலம் என்பது வினையின் காலத்தைக் குறிக்குஞ் சொல்லாகவும் தொன்று தொட்டுத் தமிழிலக்கணத்தில் வழங்கிவருவதாலும், கால், காலை, காலம் என்னும் மூன்று வடிவங்களும் குறுங் காலத்தையும் நெடுங் காலத்தையும் குறிக்கத் தமிழில் இருவகை வழக்கிலும் பெருவழக்காகத் தொன்று தொட்டே வழங்கிவருவதாலும், காலம் என்னும் சொல்லின் மூலப் பொருள் தமிழிலேயே தோன்றுவதாலும், மேனாட்டாரிய மொழிகளில் காலம் என்னும் சொல் காலப்பொருளில் வழங்காமையானும், நச்சினார்க்கினியர் கூறியபடி காலம் என்னுஞ் சொல் செந்தமிழ்ச் சொல்லேயென்று எட்டுணையும் ஐயமறத் தெளியப்படும்.

தமிழிற் சில கருத்துக்களை யுணர்த்தற்கு இதுபோது சொல்லில்லை யென்பது உண்மையே. ஆயினும் அதற்குத் தகுந்த காரணங்கள உள.

1. கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஆயிரக் கணக்கான தமிழ் நூல்களுள், தொல்காப்பியம் தவிர மற்றவையெல்லாம் அழிந்து போயினமையின், அவற்றிலுள்ள அருஞ் சொற்களும் மறைந்துபோயின.

2. பண்டைத் தமிழ் நாட்டின் பெரும்பகுதியைக் கடல் கொண்டமையின், அப்பகுதியில் வழங்கின எண்ணிறந்த திசைச் சொற்கள் அறவே மறைந்தன.

3. தமிழர் தம் அறியாமைபற்றி அருமையான தென் சொற்கட்குப் பதிலாக, வட சொற்களை வழங்கினதினாலும், பண்டைக் காலத்தில் விரிவான தமிழகராதிகள் எழுதப்படாமையாலும், வழக்கற்ற தமிழ்ச் சொற்களெல்லாம் மறைந்தொழிந்தன.

4. தமிழ், மனித சமுகத்தின் இளமையில் தோன்றிய மிகப் பழமையான மொழியாதலின், இக்காலத்திற்குரிய சில கருத்துக்கள் அக்காலத் தமிழர்க்குத் தோன்றவில்லை. அதனால் அவற்றுக்குச் சொல்லுந் தோன்றவில்லை.

5. சென்ற 2000 ஆண்டுகளாகத் தமிழ் ஆரியவயப்பட்டுள்ளமையின், புதுச்சொற்கள் புனைந்து தனித்தமிழ் வளர்க்கப்படவில்லை.

ஆகையால், தமிழைப் பிற புன்மொழிகள்போற் கருதி இழித்துக் கூறுவது தகாது.

ஒரு பொருளை ஆராயும்போது, விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலையாய் ஆராயவேண்டும்.

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்."

மேலும், வடசொல் தென்சொற்களைப் பிரித்துணர்தற்கு மொழிநூல், குலநூல் (Ethnology), சரித்திர நூல் முதலிய நூல்களின் துணை இன்றியமையாது வேண்டப்படும். ஆகையால் அவற்றின் துணைகொண்டு உண்மையறிந்து கடைப்பிடிக்க. இன்றேற் குஞ்சரந் தடவிய குருடர் கூற்றாய் முடியும் என்க.

"பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன் தெரிந்து கூறப்படும்."

# பண்டை இந்தியக் கலை

# 4

(வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L.)

## வ்ரத்யரும் வ்ரிஷலரும்

ஆரியர்கலை ஆரியரல்லாத **வ்ரத்யர்** (Vratyas), **வ்ரிஷலர்** (Vrishalas) என்பவர்மீது சுமத்தப்பட்டதையும் நாம் அறிதல் நல்லது. முதற்கண் இவ்விருவரும் யாவர் என்பதைக் காண்போம்: வ்ரத்யரைப் பற்றிப் பல செய்திகள் பஞ்சவிம்ஸ ப்ராமணுவிலும் அதர்வ வேதத்திலும் நிரம்பக் கூறப்பட்டுள்ளன. அவருள் நால் வகுப்பார் இருந்தனர். அவ் வகுப்புகளுள் முதல் மூன்றே முக்கியமானவை. அவை **ஜேஷ்டர்** (உயர்ந்தோர்), **ஹீனர்** (இழிந்தோர்), **கர-கிர்ஸ்** (விஷத்தை விழுங்குபவர்) என்னும் வகுப்புகளாம். இவர் தம் இறைவன் **ஏக-வ்ரத்யன்** எனப்பட்டான். அவ் விறைவற்கு மனைவி, புரோகிதன் (பூசாரி), தலைப்பாகை என்னும் மூன்றுண்டு. இவை மூன்றும் எந்த ஆரியக் கடவுளுக்கும் இல்லை என்பது அறியத்தக்கது. மேலும் வ்ரத்யன், மனைவி, பூசாரி இம் மூவரும் புருஷ மேதத்துக்குத் தக்கவர் (பலியிடத் தக்கவர்) என்று யசுர்வேதம் கூறுகிறது. எனவே, வ்ரத்யரும் அவர் தம் தெய்வமும் ஆரியர் இனத்தவர் அல்லர் என்பது தேற்றமன்றோ? அதர்வ வேதம் 'பவ, சர்வ, பசுபதி, உக்ர, ருத்ர, மஹாதேவ, ஈசான' என்பவை ஏக-வ்ரத்யனது பல ரூபகங்கள் என்று கூறுகிறது. இந்த 'ஏக-வ்ரத்யன்' என்னும் தெய்வம் **பழைய சிவனே** ஆகும். ஆரியர் கலையில் தோய்ந்த ஒருவனே பிற்காலத்தில் இந்தச் சிவ மூர்த்தத்தை இங்ஙனம் பல ரூபங்களாகக் கூறியிருத்தல் வேண்டும்.

## வ்ரத்யரும் அவர்தம் வழிபாட்டு முறையும்

மொஹெஞ்சொ—தாரோவில் அகப்பட்ட 12-ஆம் எண்ணுள்ள படத்தைப் பார்த்தால் உண்மை விளங்கும். அதனில், நூல்களில் கூறப்படும் ஏக-வ்ரத்யன் என்னும் சரித்திரச் சான்றுகொண்ட சிவன் யோகத்தில் இருத்தலைக் காணலாம். அவ்வுருவத்தின் ஆண் குறி மேல் நோக்கி இருக்கிறது. தலையில் கொம்புகள் உள; தலைப்பாகை உண்டு. முகம் மூன்றுண்டு. ஆனால் சிவன் 'மும்முகத்தான்' என்று யாண்டும் கூறப்படல் இல்லை; ஆயின் 'மு-அம்பகன்' (மூன்று அம்பிகைகளை உடையவன்) எனக் கூறப்பட்டிருத்தல் உண்டு. 'அம்பிகை'

என்பது பெண் தெய்வம். இது ரிக் வேதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. பூதேவியின் மூன்று அம்சங்களாகக் காணப்படும் உருவங்கள் சிந்துப் பிரதேசத்தில் கிடைத்துள்ளன. நிர்வாண கோலத்தோடு நடனம் செய்வதாக உள்ள நான்காம் உருவம் நடனமாதைக் குறிப்பிடலாம். இந் நடனமாதே ஏக-வ்ரத்யனோடு சம்பந்தப்படுத்தப்பட்ட பெண் தெய்வமாக இருத்தல் வேண்டும். மேலாடைகொண்ட சிவனுருவம் கீழாடை இன்றி இருத்தல் கவனித்தற்குரியது. சிவன் குறிகொண்டு வணங்கப்பட்ட தெய்வம்; அவ் வணக்கம் ஹீனரால் (வ்ரத்யரில் ஒரு பிரிவினர்) பின்பற்றப்பட்டு இருக்கலாம் என்று கூறலாம். இத்தகைய சிவலிங்கமும் மனித வுருவமும் வட ஆற்காடு ஜில்லாவில் உள்ள குடிமல்லம் கோயிலில் காணப்படுகின்றன. இந்த லிங்கம் ஆடை போர்க்கப்பட்டிருப்பினும், கீழாகவே போர்க்கப்பட்டிருக்கிறது. இது திகம்பர ஜைனரது தீர்த்தங்கரரது கீழ் நோக்கிய குறியை நினைவூட்டுகிறது. இவ் வணக்கம் வ்ரத்யருள் மூன்றும் வகுப்பினரதாக இருக்கலாம். இந்த இருவகைப்பட்ட 'லிங்க வணக்கம்' சிந்துப் பிரதேசப் பொருள்களைக்கொண்டும் அதர்வ வேதத்தைக் கொண்டும் நன்கறியலாம்.—இந்த வ்ரத்யர் எங்கிருந்து வந்தவர்? 'மகத' (பூசாரி) என்பது ஏக-வ்ரத்யனுடன் சம்பந்தப்பட்ட ஒரு வார்த்தை. ஆனால் அச்சொல் மகத தேசத்தைக் குறிப்பதன்று. என்னை? ரிக்வேத காலத்தில்—சம்ஹிதை காலத்தில் 'மகதம்' ஆரியர்க்குத் தெரியாதாலின் என்க. சகத் வீபத்தில் உள்ள 'மகத' த்தை இச்சொல் குறிப்பதாகலாம். அங்கிருந்துதான் 'சூரிய வணக்கம்' வந்தது. 'ஆக்ஸஸ்' யாறு பாயும் 'சோக்தியானு'ப் பிரதேசமே 'சகத்வீபம்' என்பது. சகத்வீபம் விஷ்ணு புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. வ்ரத்ய-வணக்கம் பிராமண மதத்துள் ஐக்யப்பட்டு, சைவத்துள் விருத்தியாக்கப் படுவதற்கு முன் இருந்த நிலைமையையே அதர்வ வேதம் குறிப்பிடுகிறது எனல் தவறாகாது.

## வ்ரிஷலர் கலை

வட இந்தியா முழுவதும் ஆரியர் கலை பரவிய போதிலும் கி. பி. 3-ஆம் நூற்றுண்டு வரை வட இந்தியாவின் கிழக்குப் பாகம் பிராமண மத மயமாகக் கூடவில்லை. கிழக்குப் பாகம் தனக்கெனப் பழமையான கலையைப் பெற்று இருந்ததால் பிராமணர் கலையை உள் நுழைய விடவில்லை. மநு-கௌடில்யர் நூல்களால் வ்ரிஷலர் கலை ஆரியர் கலைக்கு முற்றும் மாறு

பட்டதென்பதை அறியலாம். இந்த வ்ரிஷலர் கலையின் ஓர் அம்சம் பிராமண மதத்துக்கு முற்றும் மாறுபட்ட சிரமணத்துவம் என்பது அறியத்தக்கது. சிரமணர் என்பவர் பௌத்த சமண—ஆசீவகத் துறவிகள். ஒரு பௌத்த நூலில் ஒரு பிராமணனால் புத்தர் 'முண்டகன்—ஸ்ரமணன்—வ்ரிஷலகன்' என வெறுப்புடன் கூறப்படுகிறார். 'வ்ரிஷலகம்' என்பது பிரிவின் பெயர். கௌடில்யர் 'முத்ரா-ராக்ஷஸம்' என்னும் நூலில் சந்திரகுப்தரை 'வ்ரிஷலகன்' எனப் பன்முறை அழைத்ததாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்..............சுங்கர் ஆட்சி ஏற்படுமுன் பிராமண மதம் அரசர்களிடம் செல்வாக்குப் பெறவில்லை. இவர்க்கு முற்பட்ட மௌரியர், நந்தர், நாகர்—ஒருவரேனும் ஒரு பிராமண மதம் பற்றிய விஷயத்தை யேனும் செய்ததாகத் தெரியவில்லை. பிராண மதத்தை அடியோடு எதிர்த்து நின்றது வ்ரிஷல மதமே (பௌத்த—ஜைன—ஆசீவக மதங்கள்) ஆகும். இம்மதக் கொள்கைகளையோ—கோட்பாடுகளையோ வேதங்களிலும் உப நிஷத்துகளிலும் காணல் இயலாது. பிற்காலத்திற்றான் இவை பிராமணர் நூல்களுள் நுழைந்தன. மஹா பாரதத்தில்—சாந்திபர்வம் 175-ஆம் அத்தியாத்தில் பிராமண ஆஸ்ரம நிலையும் ஸ்மரண நிலையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இங்ஙனம், '**வ்ரிஷலர் கலை**' **ஆரியர் கலைக்கு நிகராக மிக முக்யமான அளவு இந்து மதத்தில் பங்கு கொண்டுள்ளது** என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

(தொடரும்)

## பாடம் பண்ணுவதில் பல முறைகள்

"ஒரு நூலைப் பாடம் பண்ணுவதில் மாணுக்கர்கள் வெவ்வேறு முறைகளை அநுசரிக்கின்றனர். அந்நூலைப் பலமுறை பெயர்த்தெழுதுவர் சிலர்; சிலர் வாய்ப்பாடமாக நெட்டுருப்பண்ணுவர். தாம் கற்கும் நூலின் அமிசங்களை ஒழுங்காக வகைப்படுத்திச் சுருக்கம் எழுதுவர் சிலர். நூலின் வார்த்தைகளைக் கவனியாமல் போக்கையும், கருத்தையும், விஷயங்களை விளக்கும் தோரணைகளையு மாத்திரமே நன்கு சிந்தித்துக்கொள்வர்."

— **செல்வக் கேசவராய முதலியார்.**

# நால்வர் வழியில் நலம்

[சென்னை பிரசங்கபூஷணம் பு. பா. இரத்தினசபாபதி நாயகர்,]

உயர்வுள நுண்ணிய உண்மையை உணர விழைகுநர்க்குக் கவிவ ரல்லான் வேறு கதியில்லை. அன்னவரை மறந்த வாழ்க்கையால் பொய்மை யெழுச்சிகள் பலநேர்ந்து பொல்லாதவர்க்கே புகலிடம் இவ்வுலகம் எனுஞ் சொற்பெருக்கம் எழுநேர்ந்த தெங்கணும். அமைதிக்கு வழிவேண்டி முயல்வாரைக் கனிவொடு கைகொடுத்துக் கரையேற்றுவன தமிழ்மறைகளே யென அறவோ ரெவரேனும் வாய்திறக்க நேரின், குரவரென்றும் கோயிலென்றுங் கடவுளென்றுங் கும்பிட்டுப் பாழாவீர்! உலகியலின் முன்னேற முயலாமல் கண்காணுக் கடவுளையுங் கருத்திற் கெட்டாக் கலைகளையுஞ் சிந்தித் திருந்த இருப்பானன்றே இந்நாடு இந்நிலையை யெய்தியது எனத் தாங்கற்ற அறிவையெலாங் கடலிற் கரைத்த காயமென மணமின்றிக் கழியவிட்டுப் பேசுவார் தொகை பெருகலாய பின்னர், அறிஞர்களுள் ஒன்றுதலும் கலைகளின் காட்சியும் உணர்வின் தூய ஒழுகலாறும் ஒருங்கு நிகழற் கிடனின்றி, நலமில பரப்பும் நாட்டாளும் நீர்மையில் நெறியில் இளைஞரை நீளவைக்கும் நிழற்படமும் பெருகி அலைவும் உளைவும் அங்கலாய்ப்பும் ஒழுக்கமின்மையும் ஓங்க இந்நா ளுலகைக் காண்பதுவே நம் தலைவிதியாயது.

ஏறக்குறைய இருபஃதாண்டிற்கு முன்னம் தமிழகம் தழைத்த தழைப்பிற்கும் சிந்தனையும் செயலும் வேறுவேறியங்கு மிந்நா ளிருப்பிற்கும் மலைத்துணை வேற்றுமை மன்னக் காண்டும்.

வைகறையில் நீராடி நீறுகண்டிகை நிகழ்மேனியராய்க் கோலும் குடலையுங் கொண்டு பூப்பறிக்கப் போதுங் கோலமெங்கே? ஓம் ஓம் ஓம் என ஒப்புத லொலியெழுப்பும் பரமனாலயம் நோக்கி விரைந்த பரிவெங்கே? கணபதி திருமுன் தடபடவென்னுங் குட்டுடன் தோப்புக் கரணமும் பிறவழிபாடுந் தழைத்த கனிவெங்கே? காலையும் மாலையும் இல்லந்தோறும் கோயில்தோறும் கல்லா மனத்தையுங் கரைத்துக் கண்ணீர்வாரக் கசிந்துபாடும் இன்றமிழ் மறையி னிசைவெங்கே? சிறுபான்மை யிடத்தன்றிப் பெரும்பான்மை யிடத்தில் இல்லை இவ்வளன் எனலை நினைய நெஞ்சம் நைகின்றதுவே! இல்லத்தில் நெற்றியினிட்ட நீற்றினையும் வெளிவருமமயம் கலைக்க உபயோகங் கைக்குட்டை யாகின்றதே! என்னிது

ஐய எனின், என்செய ஐய! உத்தியோகம் காக்க வேண்டா வோ எனக்கூசாது கூறும்பேச்சாளர் பெருகலாயினர்; பெரும் பான்மைப் பண்டிதர் நெற்றியுமா பாவஞ் செய்தது? அன்ன ரை வினவின் மாணவர்க்கஞ்சி மறந்தன ராஞ்சிலர்; நீற்றாற் பயன் என்னென நிகழ்த்து கின்றார் சிலர்: எனினும், தலைவலி தவிர்க்கப் பண்டையர் கொண்டனர் எனப் பகரப் பின்னி டார், இவர்: இது அன்னவர்கண்ட ஆய்வுமுறை. இக்கூற்றுக் களை ஆய இவ்வமயம் நேரமில்லை; பயனுமின்று.

"நீறிலா நெற்றிபாழ்" என்பது அழகின்மை யாமென் பதன்று; இது, யோக நுட்பம்.

"தமிழ்மறை தழைக்கா இல்லத்திற் றரித்திரம் தழைக் கும்" என்னும் தமிழகப் பழமொழி ஞானம் வாயா வெனலை விளக்கி நின்றது.

வெற்றுப் பேச்சாற் பயன் விளைதலில்லை; வான்சுரந்து வளம்பெருகி உளங்களிப்ப வாழவேண்டு மென்னின் பண்டை யோர் சென்ற நெறி பின்பற்ற லொன்றே பயன்தருவ வாகும். அவர்கள் சென்றநெறி அருட்பெருக்க விளைவிற்கே ஆனநெறி; மற்றவற்றால் விளைவதெலாம் மருட்பெருக்கே; இது கிடக்க.

உச்சிமேற் புலவர்கொள் கச்சியப்ப முனிவர் அரந்தை யகன்று வாழ்வு பெறு வழியொன்று கண்டு நம்மனோர்க்குங் காட்டினர்; அக் கவிக் கனியைச் செல்வி வழி சுவைக்க நண்பர்காள்! வம்மின் எம்மொடு.

## கச்சியப்பர் கண்ட முதற் காட்சி

திருக் கயிலை சீரார் சிவலோகத்துச் சிவபுரத்துள் ஏரார் திருக் கோயில் நிலயத்தில் எம் இறைவன் எழுந்தருளி இருக் கின்றான். முன்னே தொங்கி யூசலாடுந் துளைக்கையுள மூத்த பிள்ளையார் பின்புறமாக அத்தனை நோக்கி விரைகின்றார்; இனிமை யொழுகு மழலை மொழி யிளம் பிள்ளை யிது கண்டு தாமும் விரைந்து தந்தை பின் வருகின்ற தகவை வரைந் துரைக்கச் சொற்க ளில்லையே என்செய! ஆஅ! ஆஅ!!! அதோ; பிள்ளையரிருவரும் இறைவன் பின்னர்த் தொங்கி யசைந்து ஒளி வீசும் ஒன்பது கோலச் சடையைப் பற்றி திருத் தோள்களில் ஏறுதற்குத் தாவுகின்றனர்; அடைக்கலம் என அடியின் வீழ்ந்த மதியவனை முடியினிருத்திய முதுமறைப் பெருமானுக்கு இப் பிள்ளைகளின் செயலிற் பிழை தோன்றாது விழைவே தோன்றியது போலும்,

## இரண்டாங் காட்சி முழுமை

அருளொளிக் கற்றைத் திரளின னல்லனு வமலன்! அவன் கருணை முழுமையை உயிர்களுக்கு அறிவுறுத்த அவன் திருமுன் ஒளிர்ந்த ஒளிக்கற்றைகளுள் ஒரு நான்கு தென் தமிழுலகம் செய்த அறத்தால் இங்கு வந்து, ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய மன்னர் ஆளுடைய நம்பிகள் ஆளுடைய அடிகள் எனத் திருவுருவுந் திருப்பெயரும் தாங்கிச் செய்த அருட்செயற்களை சிற்றறிவால் ஒரு நாவாற் செப்ப வொண்ணுமோ? பிற கூட்டங் காணுமல் இறைவன் அடித் தொண்டாற்றும் அறிவின் அமைவுளர், பிறர் அடைதற் கியலாப் பெருஞ் சிறப்பெய்துவர் எனுமிதைப் பொன்னும் பெண்ணும் உறவுற வுயிர்களுக் குணர்த்திய அன்னவரைச் சமய குரவர்கள் எனப்போற்றி யொழுகினவ் வுலகர். நால்வர் வாக்குத் தெய்வ வாக்கு எனும் பழமொழியும் இதன்வழி நிலேயே றெய்தியது.

## அவற்றுள் தனித்தனிக் காட்சிகள்

### ஆளுடைய பிள்ளையார்

அருமைக் காழியில் அறக்கடவுள் ஆற்றிய அறத்தால் வந்த ஆளுடைய பிள்ளையார் ஆவடுதுறையில் இருந்த அமயம், வேள்வி செயப் பொன் விழைந்த சிவபாத இதயர்க்கு இல்லை யென்று கைவிரிக்க இசையாமல் இறைமுன் இசைத்தமிழா லிசைத்துப் பொற்கிழி வாங்கி யளித்த புரிவும்;

வான் பொய்த்துக் காவிரியின் வளங்குறைந்த அமயம் வறுமை யாவரையும் வீழிமிழலையில் வருத்துதல் புரிய, அமுதினு மினிக்கு மருந்தமிழால் அமலனிடம் இது விண்ணப்பித்து, வாசிதீரக்காசுபெற்று அடியவர் வயிற்றுப் பசிதணித்த வளனும்;

திருப்பாச்சி லாச்சிராமத் திறைவன் திருமுன் முயல்வு பலவற்றுனும் அகலாத முயலக னோயால் வருந்தி முயலகனை மிதித்த இறைவனடிக்கீழ் முனகிக்கொண் டிருந்த கொல்லி மழவன் மகளைக் கண்டு இரங்கி, “துணிவளர் திங்கள்” எனத் துவக்கி ‘மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பு’ எனச் செந்தமிழாற் பாடி அந்நோய் நீக்கிய செம்மைசேர் மாண்பும்;

தம்மைக் காணுது கேள்வியளவிற் கேண்மையுற்ற செல்வர் வணிகர் சிவநேசர் மகளாய் பாம்புகோட்பட் டிறந்த அங்கம் பூம்பாவையின் என்புஞ் சாம்பரும் அடங்கிய குடத்தை மயிலைக்

கோயின்முன் கொணரவைத்து, அடியார் பணியும் அமலன் விழவுங் காணாது போதியோ பூம்பாவாய் எனவிளித்துப் பசுந் தமிழாற் பாடி அவ்வென்பரைச் சாம்பரைப் பசுமையாக்கி உருவமாக்கிக் குடமுடைந்தெழப் பன்னீராட்டைப் பருவப் பாவையாக்கி, அப்பாவையிற் படரும் பரமன் கருணை வெள் ளத்தை ஆயிரமுகத்தா னனுபவித்த ஆக்கமும்;

## ஆளுடைய மன்னர்

கலைபல கற்றும் சமண்சார்ந்த தம்மை இறைவன் திருமுன் கதறிய தமக்கையர் வேண்டுகை வழியே மீட்க, அதன்பின் தாம் " ஒரும் வேதாந்தத்துச்சியில் பழுத்தவாரா வின்ப வருங் கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது" அருந்தநின்ற திறனும்;

பூம்புகலூர்க் கோயிலிற் புல்செதுக் கமயம் உழவாரப் படை நுழைந்த இடமெல்லாம் பொன்னும் மணியும் பொலிந் திலங்க, புல்லுங் கல்லும் பொன்னும் மணியும் ஒன்றெனவுன்னுங் கோளினராய் அவற்றை யொதுக்கி நின்ற அமைதியும்;

மின்னற் கொடியென விண்வழி யிறங்கிய மேதகுமரிவை யர் பாட்டுங் கூத்து மினம்பல செயலுங் காட்டிக் காட்டி மயக்க முயல்வுற, கலங்கா வுளத்துக் கவினுடையாராய்

" பொய்ம்மாயப் பெருங்கடலுள் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க் கில்லையே
கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த் தடங்கடலைத்
தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்றன் அடிதொடர்வான் உழிதர்கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடரேன் மின்னே" எனும்

அருந்தாண்டகம் அருளி அவ் அரிவையர் குழாத்தைச் சிவமாக் காணுஞ் செம்மாப்பும்;

## ஆளுடைய நம்பிகள்

பரவையாரை " அற்புதமோ சிவனருளோ" என அதி சயித்துக் காண்பதும்;

கோட்புலியார் தம்மகளிரான சிங்கடி வனப்பகையவரை யாள்கவெனக் குறையிரக்க, மறுத்தம் மங்கையரைத் தம் மகளிரென ஏற்றதும்;

செங்கல்லைச் செம்பொன்னாச் செய்செயலும்;

பழமலையில் அண்ணலிடம் பாடிப்பெற்ற பன்னீராயிரம் பொன்னையும் மணிமுத்த ஆற்றிலிட்டு ஆரூர்க் குளத்தினெடுத்த அதிசயமும்;

## ஆளுடைய அடிகள்

பாண்டியன் பரிகொணர அளித்த பொன்னை யிறையருட் பணிக்கே பரிந்தளித்து அதனால் உற்ற இடையூற்றை அமலனைக் கொண்டே பாற்றிக் கொண்ட அருமையும்;

புத்தமன்னன் மகள் ஊமையா யிருந்தாள் வாய்வழி சமய நுட்பங்களைப் பரமனருட் பரப்பொடு பகரவைத்த பரிசும்;

ஆன பல வியப்புச் செயல்களை நால்வரும் செய்த திறம் அனைத்தும் உணர்ச்சியிற் றனித்தனிக் காட்சி யாகின்றது கச்சியப்ப முனிவருக்கு. ஆண்டவன் அடித்தொண்டில் உரம் பெறுவார் பிறரால் இயற்றற் கரியவற்றை யெளிமையினியற் றிப் பெரும்பேறு பெறுதற்கு இயலுநரேயாவர் எனுமிதை யுணர்த்தி, ஓயாத துன்பத்தால் உடைகின்ற உயிர்களை யின்பக் கரையேற்ற கயிலையின் சிவ வொளிக் கற்றைகள் தமிழகம் போந்து தங் கடனாற்றிய பின் அத்தாணுவின் திருமுன் இன்றும் மிளிர்கின்றன எனும் முடிவுக்கு வருகின்றார் முனிவரர்.

அருளொளிக் கற்றைகளாம் அந் நால்வர் அடிக் கமலம் உள்ளத்தி னமைப்பதும் புகழ்வதும் இறைஞ்சுவதும் வாழ் விற்கு வழி என்று தாமும் கண்டு நாமுய்ய நமக்குங் காட்டுகிறார்.

“முன்னாலுந் துளைக்கரத்தோன் முருகவேள்
　　விரைந்தெழுந்து மொய்ம்பிற் றுவப்
பின்னாலுங் கதிர்ச்சடிலப் பிஞ்ஞகனை
　　ரடித்தொண்டின் பெருக்க வீறு
பொன்னாலும் பெண்ணாலு மறிவுறுத்திவ்
　　வுலகினிடர் பொன்றி யாண்ட
அந்நால்வர் பதகமல மகந்தழீஇப்
　　புகழ்ந்திறைஞ்சி யரந்தை தீர்வாம்”

(கச்சியப்ப முனிவர்)

மெய்யுணர்வுடைய கவி வரர் கச்சியப்பர்; அவர் உரைத்த வண்ணம் உலகினரில் பெரும் பகுதியோப் பற்றி யுழலும் துயவை நீக்கி தெய்வத்தின்பால் கொண்டுய்க்கும்

துறைகள் யாவற்றிலும் சிறந்த துறை, அருளொளிக் கற்றைகளாம் அந் நால்வர் வகுத்த நெறி பின்பற்றி வாழ்வதுவே. பொய்யும் பொறாமையும் பேரவாவும் அறவே ஒழிந்து வீட்டுநெறி காட்டும் நீற்றுச் சமயத்தில் விழைவுமிக்கு யாவரும் எங்கும் அழகினும் அன்பினும் இன்பினும் ஆழ்ந்து வாழ்வதற்குரிய இவ் வழியன்றி வேறெதனைச் சொன்னாலும் செய்தாலும அது மக்கள் நன்மைக்கும் பெருமைக்கும் நலமிலதாய் முடியும் என்பதைப் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்கின்றோம்.

**தமிழ் மறை ஒலி எங்கணுந் தழைப்பதாக !**

---

**சிறுவர்க்கான கட்டுரைப் பகுதி :**

## நாட்குறிப்பின் பயன் (Diary and its uses)

[வித்துவான் மு. வரதராஜன், பி. ஓ. எல்.]

நாள்தோறும் நிகழ்வனவற்றைக் குறித்து வைத்தல் நாட்குறிப்பு எனப்படும். ஆங்கிலத்தில் 'டைரி' (Diary) என்பர். இக்காலத்தில், நாட்குறிப்பு, பெரும்பயனுடையதெனக் கருதப்பட்டுப் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது.

வணிகர், அரசியலாளர், ஆராய்ச்சியாளர் இவர்கட்கு இது மிகமிக இன்றியமையாதது. வணிகர் தாம் நாடோறும் அறியும் வாணிகக் குறிப்புக்களைக் குறித்துக்கொள்வர். அரசியலாளர் நாட்டு நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்துக்கொள்வர். ஆராய்ச்சியாளர் தாம் கண்ட மாறுதல்களையும் புதுமைகளையும் குறித்துவைப்பர். ஏனையோர்க்கும் இங்ஙனம் இன்றியமையாப் பலவற்றையும் குறித்துவைக்க நாட்குறிப்பு மிகப் பயனுடையதாகும். அறிஞர் தத்தம் எண்ணங்களையும் அநுபவங்களையும் குறித்தல் உண்டு. எவ்வகையிலேனும் மறந்துவிடக் கூடியவற்றை மறவாமல் போற்றும்பொருட்டு இது மிக இன்றியமையாததாகின்றது. இங்ஙனம் குறித்து வைக்காதுவிடின், ஒருவர் தாம் காண்பன, கேட்பன, அறிவன எல்லாவற்றையும் மறவாதிருத்தல் கூடுமோ ?

நாட்குறிப்பின் பயன் மிகப் பெரிது. அது வணிகர்க்கு மிகுந்த ஊதியம் பெற்றுத்தரும் ; அரசியலாளரைச் செய்வன திருந்தச் செய்யுமாறு காக்கும் ; ஆராய்ச்சியாளரை மேன் மேலும் விடாமுயற்சி செய்யுமாறு தூண்டும் ; நல்லறிஞர்

தூய வாழ்வு நடாத்துமாறு துணைசெய்யும். தம்முடைய எண்ணங்களிலும் செயல்களிலும் நல்லன, தீயன அனைத்தும் குறித்து வைத்திருப்பவரை, மேலும் தீயன எண்ணுவாறு தடுத்து, நல்லன பெருக்குமாறு ஊக்கும். இங்ஙனம், நல்லாசிரியர்போன்று நாடோறும் உடனிருந்து காத்தலினால், ஆனந்தரங்கம் பிள்ளை, பாரதியார் போன்ற பெரியோரும் நாட்குறிப்பு எழுதும் வழக்கத்தைக் கடமையாகக் கொண்டனர்.

நாள்தோறும் பல்வேறு கடைமைகளைச் செய்யவேண்டிய தொழில்களில் அமர்ந்தவர், நாட்குறிப்பில் தத்தங் கடமைகளை அவ்வந்நாட்களுக்குரிய ஏடுகளில் முன்னரே குறித்துவிடுவர். அவ்வந் நாட்கள் வந்தவுடன், மறந்து விடாமல், அவ்வக் கடமைகளைச் செய்து நற்பெயர் பெறுவர். திருக்குறள் என்னும் தமிழ்மறையினின்று ஒவ்வொரு நாளேட்டிலும் மணிக்குறள் ஒவ்வொன்று அச்சிடப்பட்டிருப்பின், அத்தகைய நாட்குறிப்பால் விளையும் பயனை விளக்குதலும் வேண்டுமோ? நாடோறும் மறைமொழி பயின்றுபயின்று நிறைமொழி மாந்தராகும் பெருமையை தருமன்றோ? இங்ஙனம், பல்வகைப் பயன்தரும் நாட்குறிப்பைப் பற்றிச் சுருங்கக்கூறின், அஃது அலைந்தலைந்து திரியும் மனத்தை அடக்கி ஆளும் திறன் அளிப்பது எனலாம்.

இவையனைத்தையும் விடச் சிறந்த பயன் மற்றொன்று உளது; ஆனால் அப்பயன் நாட்குறிப்பு எழுதியவர்க்கு அன்று; அவர்க்குப்பின் வாழும் மக்களுக்கு விளையும் பயன் ஆகும். மிகச் சீரியவாழ்க்கை நடாத்திய நல்லறிஞருடைய நாட்குறிப்பை ஆராய்ந்து அவர் காட்டிய உயர்ந்த வழியைப் போற்றி வாழ்தல் விழுமிய பயனே அன்றோ?

---

## இரண்டாவது தென்னிந்திய முதியோர் கல்வி மாநாடு

1940 சனவரி மூன்றாவது வாரத்தில், மதுரையில் முதியோர் கல்வி மாநாடு நடைபெறத்தக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவ்வமயம் முதியோர் கல்விக்கான நூல்கள் படங்கள் முதலியன அடங்கிய காட்சி ஒன்றும் அமைக்கப்பெறும். மதுரை முனிசிபல் சேர்மன் திருவாளர் நா. ம. ரா. சுப்பராமன் அவர்கள், எம். எல்., ஏ. வரவேற்புக் கழகத்தலைவராகவும், திருவாளர் கிருஷ்ணசாமி பாரதி, எம். எல். ஏ., அவர்களும், மதுரை ஜில்லாப்போர்டு துணைத்தலைவர் கோ. வெங்கடாசலபதி அவர்களும் அமைச்சர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

கழகப்பதிப்புக்கள் காட்சிச் சாலையில் வைக்கப்பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# மதிப்புரை

**திருக்குறள் விரிவுரை** (பாயிரம்), ஆசிரியர் திரு.வி.கலியாண சுந்தர முதலியார் 400 பக்கங்கள், விலை ரூ. 2.

உலகின் எழுத்தோவியம் திருக்குறள். திருவள்ளுவர் உலகையே திருக்குறளாக எழுதினார். அத்திருக்குறளுக்கு விரிவுரை காணும் வாயிலாக ஆசிரியரது நற்செய்தியை விளக்க எழுந்தது இவ்வினிய தமிழ் உரைநடை நூல். திருக்குறட்பாயிர அதிகாரங்கள் நான்கினுக்கும் பொருள் கருத்து விருத்தி என்னும் முக்கூற்றின்வழி ஆராய்ந்து ஆசிரியர்கண்ட முடிபுகள் யாவரும் கற்றறிதற் குரியன.

**கயாதரம்:** சென்னைப் பல்கலைக் கழகத்தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் ராவ்சாஹிப் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்தது. 108 பக்கங்கள், விலை ரூ. 1.

"தேவை" என்னும் இராமேச்சுரத்தில் பதினேழாம் நூற்றாண்டில் இருந்த சைவ அந்தணர் கயாதரர் என்பவர் எழுதிய நிகண்டு நூல். மாணவர்கட்குப் பெரிதும் பயன்படும் வகையில் செய்யுள் முதற் குறிப்பகராதி பொருளடக்கம் முதலியவற்றோடு திருந்திய முறையில் அழகாக வெளியிடப்பட்டுள்ளது.

**இறையனார் அகப்பொருள்** மூலமும் நக்கீரனார் உரையும்: பவானந்தர் கழக முதல்வெளியீடு 380 பக்கங்கள் விலை ரூ. 2–8.

இதன் பதிப்பாசிரியர்கள் திருவாளர் கா. ரா. கோவிந்தராஜ முதலியார் அவர்களும், வித்வான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களும் ஆவார்கள். இதன்கண் மேற்கோள் இலக்கியக் குறிப்புரையும், உவமைப் பட்டியும், அரும்பத அகராதியும், மெற்கோட் சூத்திர முதற்குறிப் பகராதியும். மேற்கோள் இலக்கிய முதற்குறிப் பகராதியும் புதிதாக எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன. அழகிய கட்டடம் அமைந்தது. மாணவர்கட்குப் பெரிதும் பயன்படுவது.

**இந்நூல்கள் கழகத்திலேயே கிடைக்கப்பெறும்.**



திருப்புகழாமிர்த ஆசிரியரும்,
தமிழ்ச் சொற்பொழிவாளருமாகிய
**திருமுருக கிருபானந்தவாரி யவர்கள்.**